2

122

# பால போத

## இலக்கண வினாவிடை

முதலாம் பாரத்திற்குரியது

**Edward Swamickan**

Printed at

**Arunothiyam Printing Press,**

Vannarpet,—Palamcottah.

1932

Rights Reserved] **[Price 4 Annas**

I. M.

# OPINIONS (அபிப்பிராயம்)

ஒரு மொழிப் பயிற்சிக்கு அம்மொழியின் இலக்கணப் பயிற்சி இன்றியமையாது வேண்டற் பாலதாம். சூத்திர வடிவ மாயமைந்த தமிழ் மொழி யிலக்கணத்தைக் காண்டிகை யுரையும் விருத்தியுரையும் வேண்டாது யாரும் எளிதிற் படித்தல் இயலாது. இலக்கண மென்றாலே மாணவர் அலக்கணுற்றழுகின்றனர். காரணமென்ன? இலக்கணச் சூத்திரங்களைப் படிக்கஅவர்களால் இயல்வதில்லை ஒருவாறு ஒருமுறை பிழையறப் படித்து விட்டாலும் பொருள் விளங்குவதில்லை. பொருள் விளங்கினும் மனத்தில் கலக்கம் ஏற்பட்டுவிடுகின்றது.

இம்முறையி லமைந்த இடரை நீக்குவதா யிலங்குவது திருவாளர் A. J எட்வர்ட் சுவாமிக்கண் அவர்கள். எழுதிய பால போத இலக்கணமே III. மாணவர் மனத்தில் பசு மரத் தாணி போல் பதியுமாறு மத்திய போதன முறைப்படி எழுதப்பட்ட இதனை யான் பெரிதும் பாராட்டுகிறேன். இதனி லுதாரணமாக இவர் உதவிய சொற்கள் பெரும்பாலும் மாணவர் வீட்டிலும் வெளியிலும் வழங்கு மியற் சொற்களே. அப்பியாஸமெல்லாம் மாணவர் கண்ணையுங் கருத்தையும் கவரும் வண்ணம் அமைந்துள. கீழ் வகுப்பில் படித்த பாடங்களை மீண்டும் நினைவுறுத்தியே மேல் வகுப்பினில் பாடந்தொடங்க வேண்டுமென்ற அருங்கருத்துடன் ஆசிரியர் பழைய பாடத்திற் கேள்விகளை இதனுள் அமைத்தது அறிந்து போற்றத்தக்கதாம். எம்முறையிலும் முதற்பாரத்துக்குரிய இலக்கணபாடமாக இலங்குமிதனைத் தலைமையாசிரியர்கள் தத்தம்பள்ளியிற் பாடமாகவைத்துப் போற்றுவீர்களாக-

இங்ஙனம்

இந்துக்காலேஜ்
திருநெல்வேலி
21—10—32

வித்துவான் P. K. அருணாசலம்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.

# முகவுரை

இப் புத்தகம் ஆறும் வகுப்பிற்காக இயற்றப்பட்டுள்ளது. மற்றும் 4, 5, 7, 8 [i, ii, iii, பார்ம்] வகுப்புக்களுக்கும் மத்திமபோதனமுறையை அனுசரித்து, ஒவ்வொருவகுப்பிலும் படிக்கவேண்டியபாட அளவுக்குத்தக்கதாகவும், பலஉதாரணங்கள், அப்பியாசங்களுடனும், அநுபந்தங்களுடனும் இனிய, எளிய நடையில் எழுதி, அச்சிட்டு, வெளிப்படுத்தி யுள்ளேன்.

தமிழ் மொழியின் முன்னேற்றம் விரும்பும் பெரியோர்கள் இந்த நன்முயற்சியை ஆதரிக்க விரும்புகின்றேன்.

இப்புத்தகங்களை எழுதுவதிலும், பிரசுரஞ் செய்வதிலும் ஆலோசனையும் ஒத்தாசையும் அளித்த பெரியோர், நண்பர்களுக்கு என் மிகுந்த நன்றியறிதல் உரிமையாகின்றது.

மேலும் இப்புத்தகங்களின் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டுத் திருத்தம் செய்து கொடுத்த செயின்று ஜான்ஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வித்துவான் தா. மாசிலாமணி அவர்களுக்கும் என் நன்றியறிதல் மிகுந்துளது.

**A. J.** எட்வர்ட். சுவாமிக்கண்,
பிஷப் சார்சென்று பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த
மாடல்ஸ்கூல், முருகன்குறிச்சி
பாளையங்கோட்டை.

## பொருளடக்கம்—III

1. எழுத்தியல்:- நாற்கணம், அகச்சுட்டு, புறச்சுட்டு, வினாப்பொருள் உணர்த்தப்படும் விதம், இனவெழுத்து.

2. சொல்லியல்:- பொதுமொழி, திசைச்சொல், வடசொல், இயல்புவழக்கு, தகுதிவழக்கு

3. பெயரியல்:- பெயர்ச் சொற்களின் முக்கியவகைகள், ஆகுபெயர், பற்பல வகைப் பெயர்ச் சொற்கள், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், பொதுப் பெயர்கள், திணை, பால், எண், இடம், வேற்றுமை:- சொல்லுருபுகள், பொருள்கள், விளியேலாப் பெயர்கள், வேற்றுமைகளும், சாரியைகளும்,

4. வினையியல்:- வினைச்சொல் வகைகள், தெரிநிலை, குறிப்பு, உடன்பாடு, எதிர்மறை, செயப்படுபொருள் குன்றிய, குன்றாவினைகள், பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, பகுதி, விகுதி, இடைநிலை, காலங்கள், தெரிநிலை எதிர்மறை வினைமுற்று, தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம், ஏவல், வியங்கோள் வினைகள்.

1026

5 இடையியல்:- வகைகள், உணர்த்தும் பொருள்

6 உரியியல், பெயருரி, வினையுரி.

494.8115

7. புணரியல், வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சிகள், தொகாநிலைத்தொடர், தொகைநிலைத் தொடர், அல்வழி ஐவகைத்தொகைகள், விகாரப்புணர்ச்சி, உயிரீற்றுப்புணர்ச்சி, வகர, யகர உடம்படுமெய்கள், க, ச, த, ப, மெய்கள் மிகும் இடங்கள், மெய்யீற்றுப் புணர்ச்சி, லகர, ளகர, ணகர, மெய்கள், மகரவீற்றுப்பெயர்.

8. சொற்றொடரியல். வாக்கிய வகைகள், தனிநிலை, தனிநிலைத் தொடர், கலவை வாக்கியங்கள், முதனிலை, துணைநிலை வாக்கியங்கள்.

குறிப்பு:- இருண்ட எழுத்தில் அச்சிடப்பட்டவை புதிய பாடமாகும்.

220417

# பால போத இலக்கணம்—III

## 1. தமிழ் இலக்கணம்

தமிழ்ப் பாஷையைப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூல்.

## I. எழுத்தியல்

### 1. நாற்கணம்

உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என நான்கு வகைப்படும்.

உயிர்க்கணம்:- அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிர்எழுத்துக்கள்.

வன்கணம்:- க், ச், ட், த், ப், ற், என்ற வல்லின மெய்கள்.

மென்கணம்:- ங், ஞ், ண், ந், ம், ன், என்ற மெல்லின மெய்கள்.

இடைக்கணம்:- ய், ர், ல், வ், ழ், ள், என்ற இடையின மெய்கள்.

பழைய பாடத்தில் கேள்விகள்.

1. உயிர்எழுத்து என்றால் என்ன?

2. உயிர்எழுத்துக்களில் குறில், நெடில் எவை? ஏன் அப் பெயர் உண்டாயிற்று?

3. சுட்டெழுத்துக்கள் குறிலா? நெடிலா? அவை எவை?

4. வினாவெழுத்துக்கள் எவை? அவை எங்கு நின்று வினாவை உணர்த்தும்?

அப்பியாசம் 1.

எழுத்துக்களைத் தகுதியான இடங்களில் அமை.

TB PB1(67) N32

உ, சௌ, கா, தீ, ற், ஈ, ங், வெ, ர், ச், ஙே, வு, ய், ட், ம், டு, பூ, கு, ஊண, ஞு, ஒ, ல், ரொ, ணை.

| எழுத்து | உயிர் எழுத்து | | மெய் எழுத்து | | | உயிர்மெய் எழுத்து | |
|---|---|---|---|---|---|---|---|
| | குறில் | நெடில் | வலி | மெலி | இடைமை | குறில் | நெடில் |
| | | | | | | | |

## 2. அகச்சுட்டு, புறச்சுட்டு.

(எ) ஒரு சொல்லின் அகத்தில் பகுக்கக்கூடாத உறுப்பாய் நின்று சுட்டுப்பொருளை உணர்த்துவது அகச்சுட்டு.

அவன் இவள் உது

(பி) ஒரு சொல்லின் புறத்தில் பகுக்கக்கூடிய உறுப்பாய் நின்று சுட்டுப்பொருளை உணர்த்துவது புறச்சுட்டு.

அம்மனுஷன், இவ்வீடு, உவ்வாடு

## 3. வினாப்பொருள் உணர்த்தப்படும் விதம்

எ, யா மொழிக்கு முதலில் நின்றும், ஆ, ஓ, ஈற்றில் நின்றும், ஏ, இவ்விருவிடங்களில் நின்றும் வினாப்பொருள் உணர்த்தும்.

எவன் வந்தான்?<br>யாது செய்தான்? } எ, யா மொழிக்கு முதலில் நின்றன.

அவனா செய்தான்?<br>அவளோ சொன்னாள்? } ஆ, ஓ, மொழிக்கு ஈற்றில் ...

ஏன் அங்கு போனாய்?<br>அவனே அங்கு போனான்? } ஏ. மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் நின்றது.

### பழைய பாடத்தில் கேள்விகள்.

1. மெய்யெழுத்துக்கள் எவை?
2. மெய்யெழுத்துக்கு ஒலியுண்டாகும் விதம் எப்படி?
3. மெய்யெழுத்துக்களின் வகைகள் எவை?
4. உயிர்மெய் எழுத்தில் முதல் எழுத்து எது? ஈற்றெழுத்து எது?

## 4. இனவெழுத்து

பிறப்பிடம், முயற்சி, மாத்திரை, பொருள், வடிவு ஆகிய இவற்றில் ஒன்றும் பலவும் ஒத்துவரும் எழுத்துக்கள் ஒன்றுக் கொன்று இனவெழுத்தாகும்.

உயிரெழுத்துக்களில் நெடிலும், குறிலும் ஒன்றுக் கொன்று இனம். ஐகாரம் இகரத்திற்கும், ஔகாரம் உகரத் திற்கும் இனமாம்.

அ, ஆ; இ, ஈ, ஐ; உ, ஊ, ஔ; எ, ஏ; ஒ, ஓ என்பன.

மெய்யெழுத்துக்களில் வல்லெழுத்தும், மெல்லெழுத்தும் ஒன்றுக்கொன்று இனம்.

க், ங்; ச், ஞ்; ட், ண்; த், ந்; ப், ம்; ற், ன்; எனவரும்.

இடையெழுத்து ஆறும் ஓரினமாகும்,

## II. சொல்லியல்

எழுத்துக்கள் பொருள் உணர்த்தும் விதம் என்ன?

## 5. பொதுமொழி

சொற்கள் தனிமொழிக்கும், தொடர் மொழிக்கும் பொதுமொழியாய் நின்று பொருள் உணர்த்துவது.

1. தனிமொழி:- ஆ, பூ, கை. மை, மறு, தாள், மாடு.
2. தொடர்மொழி:- பலகை, தாமரை, புதுமை.

| | |
|---|---|
| பலகை —தனிமொழி | அறுக்கப்பட்ட மரம். |
| பலகை —தொடர்மொழி | அநேக கைகள். |
| தாமரை—தனிமொழி | ஒரு வகைச் செடி. |
| தாமரை—தொடர்மொழி | தாவுகின்ற மான். |
| புதுமை—தனிமொழி | ஆச்சரியம். |
| புதுமை—தொடர்மொழி | புதிய மை. |

## 6. திசைச்சொல்

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த கொடுந்தமிழ் நாடுகளி லிருந்தும் தமிழ் பேசப்படாத மற்றைய அயல் நாடுகளிலிருந் தும் வந்து தமிழ்ப் பாஷையில் வழங்கும் சொல்.

| திசைச்சொல் | அயல்நாடு | தமிழ்மொழி |
| --- | --- | --- |
| அந்தோ | சிங்களம் | ஐயோ |
| வெள்ளம் | மலையாளம் | தண்ணீர் |
| சலாம் | இந்துஸ்தானம் | வந்தனம் |

## 7. வடசொல்

தமிழ்ப் பாஷையில் வழங்கும் ஸம்ஸ்கிருதச்சொல்.

| வடசொல் | தமிழ்மொழி |
| --- | --- |
| குஞ்சரம் | யானை |
| ஸர்ப்பம் | பாம்பு |
| பங்கஜம் | தாமரை |

## 8. வழக்கு

சொற்கள் இலக்கியத்தில் வழங்கும் விதம். அஃது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

### 8—1. இயல்பு வழக்கு

சொற்கள் இயல்பாய் வழங்கும் விதத்தை உணர்த்துவது. அது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூவகைப்படும்.

#### (அ) இலக்கணமுடையது

சொற்கள் இலக்கண அமைதிப்படி வழங்குவது.

| | |
| --- | --- |
| நான் போனேன். | நாங்கள் போனோம். |
| நாய் குரைக்கிறது. | நாய்கள் குரைக்கின்றன. |

#### (ஆ) இலக்கணப்போலி

சொற்கள் இலக்கண அமைதிப்படி அமையாவிடினும் இலக்கண அமைதியுடையனபோல வழங்குவது.

| இலக்கணப்போலி. | இலக்கணமுடையது. |
| --- | --- |
| புறங்கடை | கடைப்புறம் |
| கோயில் | கோவில் |
| வாயில் | இல்வாய் |

### (இ) மரூஉ

• சொற்கள் இலக்கண அமைதிகெட்டு மருவி வழங்குவது.

| மரூஉ | இலக்கணமுடையது |
|---|---|
| அருமந்த பிள்ளை | அரும் மருந்து அன்ன பிள்ளை |
| வேர்ப்பார் | வியர்ப்பார் (கோபம் கொள்வோர்) |

## 8—2. தகுதி வழக்கு

சொற்கள் இயல்பாய் வழங்குதலின்றி தகுந்த காரணத்தினால் வேறு வகையாய் வழங்குவது. அது இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூவகைப்படும்.

### (அ) இடக்கரடக்கல்

சொல்லத் தகாததை மறைத்து வழங்குவது.

கால் கழுவி வந்தான்.
ஒன்றுக்குப் போய்வருகிறேன்.

### (ஆ) மங்கலம்

அமங்கலமானதை மங்கலமாக வழங்குவது.

| | |
|---|---|
| நன்காடு சேர்ந்தார் | சுடுகாடு |
| பானை விரிந்தது | உடைந்தது |

### (இ) குழூஉக்குறி

ஒரு கூட்டத்தார் ஒரு காரணத்தால் ஒரு பொருளின் சொற்குறியை ஒழித்து வேறு சொல்லால் அப்பொருளைக் கூறுவது.

| | |
|---|---|
| சொல்விளம்பி | கள் |
| பறி | பொன் |

### அப்பியாசம் 2.

இவை ஒவ்வொன்றும் எதற்கு உதாரணமாகும்?
இவ்வாலயம், அமக்களம், துஞ்சினார், புறநகர், மதிவெள்ளை, வாய் அலம்பு, கருப்பு ஏறியிருக்கிறார், அம்மாடு, வாய்க்கால், தாலி பெருகிற்று, நல்லார்.

பழைய பாடத்தில் கேள்விகள்.

1. அறுவகைப் பெயர்ச்சொற்கள் எவை? உதாரணம் கொடு.
2. பெயர்ச்சொற்களில் எவைகளை அறியவேண்டும்?
3. பானை, பாளம், பாகு, பழம். எட்டு வேற்றுமையும் கூறு.
4. யான், நாங்கள், தான் என்பவைகளின் 2-ம் வேற்றுமை என்ன?

## III. பெயரியல்

### 9. பெயர்ச்சொற்களின் வகை

அறுவகைப் பெயர்ச்சொற்களும் இடுகுறிப்பெயர், காரண இடுகுறிப்பெயர் என்றும், பொதுப்பெயர், சிறப்புப் பெயர் என்றும், இயற்பெயர், ஆகுபெயர் என்றும் பலவகைப் படும்.

### 9—1. இடுகுறிப்பெயர்

யாதொரு காரணமின்றி ஒரு பொருளுக்குக் குறியாக இடப்பட்டு வழங்கும் பெயர்.

கண், மிருகம், பஞ்சு, மரம்.

### 9—2. காரண இடுகுறிப்பெயர்

காரணத்தை நோக்கும்போது அக்காரணத்தையுடைய பலவற்றிற்குப் பெயராய் வழங்கக் கூடியதாயினும் அவ்வாறு வழங்காமல் அக்காரணத்தையுடைய ஒன்றிற்கே உரிய குறியாக இடப்பட்டு வழங்கும் பெயர்.

வற்றல், செவிடன், பறவை, நாற்காலி,

### 9—3. பொதுப்பெயர்

ஓர் இனத்தைச் சேர்ந்த பல பொருள்களுக்குப் பொதுவாக வழங்கும் பெயர்.

மனுஷன், மரம், நாடு, மிருகம்.

### 9—4. சிறப்புப்பெயர்

ஓர் இனத்தில் ஒன்றுக்காவது, ஒரு வகைக்காவது சிறப்பாக வழங்கும் பெயர்.

இராமன், அத்தி, குடகு, சிங்கம்.

### 9—5. இயற்பெயர்

ஒரு பொருளுக்கு இயல்பாய் வழங்கும் பெயர்.

தலை, நாழி, வெற்றிலை, மரம்.

### 9—6. ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு இயைபுடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராகி வருவது.

| இயற்பெயர் | ஆகுபெயர் |
|---|---|
| தலை வலிக்கிறதோ? | தலைக்கு ஓர் அம்பலமா? |
| வெற்றிலை வாங்கினன். | வெற்றிலை நடுகிறார்கள். |
| ஊர் சேர்ந்தான். | ஊர் அடங்கிற்று. |
| நாழி உடைந்தது. | எங்களுக்குத் தினம் இரு நாழி வேண்டும் |

தலை, வெற்றிலை, ஊர், நாழி என்னும் இயற்பெயர்கள் ஆகுபெயராகும்போது, ஒரு ஆளுக்கும், வெற்றிலைக் கொடிக்கும், ஊராருக்கும், நாழி அளவான தானியத்திற்கும் பெயர் ஆகிவந்தன.

### 10. பற்பலவகைப் பெயர்ச்சொற்கள்

(அ) பொருளாதி அறுவகைப்பெயர்கள்.

1. பொருட்பெயர்.— மேசை, பொன், பேனா, சிங்கம்.
2. இடப்பெயர்:— ஊர், காடு, நாடு, கடல்.
3. காலப்பெயர்:— நாழிகை, சனி, ஆவணி, பொழுது.
4. சினைப்பெயர்:— மூக்கு, நரம்பு, இலை, பட்டை.

5. பண்புப்பெயர்:— நன்மை, தூய்மை, அன்பு, அழகு.
6. தொழிற்பெயர்:— படித்தல், செயல், ஓட்டம், வரவு.

குறிப்பு:- (1) தொழிற்பெயர் விகுதிகளாகிய தல், அல், அம் ஐ, கை, வை, கு, பு, சி, வி, தி, முதலியவைகளில் ஒன்று வினைப்பகுதியோடு பொருந்தி தொழிற்பெயர் பிறக்கும்.

1. புகழ்—புகழ்தல்
2. செய்—செயல்
3. ஓடு—ஓட்டம்
4. கொல்—கொலை
5. சேர்—சேர்க்கை
6. பார்—பார்வை
7. போ—போக்கு
8. படி—படிப்பு
9. உணர்—உணர்ச்சி
10. உதவு—உதவி
11. மற—மறதி

குறிப்பு:— (2) காலத்தை உணர்த்தும் தொழிற்பெயர் காலங்காட்டும் தொழிற்பெயர்.

வந்தமை, செய்கின்றமை, நடப்பது.

### (ஆ) பொருளாதி அறுவகையால் வருபெயர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பொருளால் வருபெயர்: | | பொன்னன், | பொன்னி. |
| 2. | இடத்தால் | ,, | மலையன், | பட்டணத்தான். |
| 3. | காலத்தால் | ,, | சித்திரையன், | ஆதிரையாள். |
| 4. | சினையால் | ,, | மூக்கன், | கூனி. |
| 5. | பண்பால் | ,, | நல்லான், | தீயார். |
| 6. | தொழிலால் | ,, | கணக்கன். | ஓதுவார். |

### (இ) வினையாலணையும் பெயர்

வினைமுற்றால் அணைந்து பெயரின் தன்மையை அடைந்தது. அது செயலையும், காலத்தையும், செய்பவனையும், இருதிணை, ஐம்பால், மூவிடங்களிலும் உணர்த்தி வேற்றுமை உருபையும் ஏற்றுவரும்.

படர்க்கை வினையாலணையும் பெயர்களில் ஒன்றன்பால் தவிர மற்றவை சிறிது வேறுபட்டு வருதலும் உண்டு.

உதாரணம்.

| | |
|---|---|
| நம்பினேனைக் கைவிடாதே | தன்மைஇடம் |
| செய்தீரைக் கண்டனர். | முன்னிலைஇடம் |
| படித்தோனால் இயற்றப்பட்டது. | படர்க்கைஇடம் |

கண்டோன் என்பது கண்டவன் எனவும், காண்போன் என்பது காண்பவன் எனவும் ஈறு வேறுபட்டுவரும்.

(ஈ) சுட்டுப்பெயர்:— அவர், இது, உவள்.

(உ) வினைப்பெயர்:— எவன், யாவர், எது, எவை.

(ஊ) கிளைப்பெயர்

உறவின் முறையை உணர்த்தும் பெயர்.

பாட்டி, அக்கை, மாமி, பெயரன்,

(எ) சாதிப்பெயர்

வருணத்தை உணர்த்தும் பெயர்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.

(ஏ) அளவுப்பெயர்

எண்ணல், எடுத்தல், நீட்டல், முகத்தல், ஆகிய நான்கினுள் ஒன்றை உணர்த்தும் பெயர்.

ஐந்து, வீசை, முழம், ஆழாக்கு.

| | | |
|---|---|---|
| (ஐ) | 1. தன்மை இடப்பெயர் | நான், யான், நாம், நாங்கள். யாம், யாங்கள், |
| | 2. முன்னிலை ,, | நீ, நீவிர், நீங்கள். |
| | 3. படர்க்கை ,, | அவன், அவர், அது, மரம். அவர்கள், அவை, மரங்கள். |

(ஒ) பொதுப்பெயர்

திணை, பால், இடங்களில் தத்தமக்குப் பொதுவாய் வழங்குவது.

### (1) திணைப்பொதுப்பெயர்

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாய் வழங்குவது. ஆண், பெண், தாய், தந்தை, தான், தாம், பிள்ளை, அன்னை, பிதா, என்னும் படர்க்கைப் பெயர்களும், தன்மை, முன்னிலைப் பெயர்களும், சூரியன், சந்திரன், கடவுள் என்னும் பெயர்களும் திணைப் பொதுப்பெயர்கள்.

| | உயர்திணை | அஃறிணை |
|---|---|---|
| (உ-ம்) | ஆண்குழந்தை. | ஆண்கன்று, ஆண்மரம். |
| | அவர் தான். | அது தான். |
| | கடவுள் வந்தார். | கடவுள் வந்தது. |

### (2) பால் பொதுப்பெயர்

சாலி, இ என்ற விகுதிகளில் ஒன்றைப்பெற்றும், பெறாதும், ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக வருவது.

குணசாலி, பாக்கியசாலி, குற்றவாளி, பாவி, ரோகி, பெற்றோர், ஊமை, மக்கள், பிள்ளை, குழந்தை.

| | | |
|---|---|---|
| (உ-ம்) | அவன் குணசாலி | அவள் குணசாலி |
| | ஊமை வந்தான் | ஊமை வந்தாள் |
| | ஆண்பிள்ளை பெற்றாள் | பெண்பிள்ளை பெற்றாள். |

### (3) இடப்பொதுப்பெயர்

மூன்று இடங்களுக்கும் பொதுவாய் வழங்குவது.

தான், தாம், எல்லாம்.

(உ-ம்) நான் தான், நீ தான், அவன் தான்.

### அப்பியாசம் 3.

ஒவ்வொன்றும் எவ்விதப் பெயர்ச்சொல்.

முயற்சி, வெள்ளை வந்தது, எவன், கெஜம், அண்ணன், வணிகர், தட்டான், எட்டு, நீர், நாம், தாம், பிள்ளை,

இவரா, மகள், சுருட்டு, அது, செய்தோனை, வம்பு, அலுத்தவன்.

11. பெயர்ச் சொல்லில் அறிய வேண்டியவை திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகிய ஐந்துமாம்.

## 11—1. திணை

மக்கள், தேவர், நரகர் உயர்திணை. மற்ற உயிர் உள்ளனவும், உயிர் இல்லனவும் அஃறிணை.

உயர்திணை:— நந்தன், கடவுள், யமன்.

அஃறிணை: — யானை, மலை, நதி, பாம்பு.

## 11—2. பால்

பாலானது திணையின் பிரிவு. உயர்திணைப் பால்கள்—ஆண்பால், பெண்பால், பலர்பால். அஃறிணைப் பால்கள்—ஒன்றன்பால், பலவின்பால். பால்காட்டும் விகுதிகள் பெயர்ச் சொல்லின் ஈற்றில் நிற்கும்.

1. ஆண்பால் விகுதி:- அன், ஆன், மன், மான், ன், வான், காரன்.
2. பெண்பால் விகுதி:- அள், ஆள், ள், இ, சி, தி, வதி, வாட்டி, காரி.
3. பலர்பால் விகுதி:- அர், ஆர், கள், மார்.
4. ஒன்றன்பால் விகுதி:- து, று.
5. பலவின்பால் விகுதி:- அ, வை, கள்.

### பெண்பால் உண்டாகும் விதங்கள்

| ஆண்பால்—பெண்பால் | ஆண்பால்—பெண்பால் |
|---|---|
| இராக்ஷஸன்—இராக்ஷஸி | விரதன்—விரதை |
| இராயன்—இராக்கினி | துஷ்டன்—துஷ்டை |
| சிறுவன்—சிறுமி | ஐயன்—ஐயை |
| சக்கரவர்த்தி—சக்கரவர்த்தினி | நம்பி—நங்கை |

| ஆண்பால்—பெண்பால் | ஆண்பால்—பெண்பால் |
|---|---|
| குணவான்—குணவதி | தநயன்—தநயை |
| வம்சத்தான்—வம்சத்தாள் | கூலிக்காரன்—கூலிக்காரி |
| கெட்டவன்—கெட்டவள் | அண்ணன்—அக்கை |
| மணவாளன்—மணவாட்டி | கடா—ஆடு |
| கண்யவாளன்—கண்யவாட்டி | மறி—புருவை |
| ஆயன்—ஆச்சி | களிறு—பிடி |
| தமிழன்—தமிழச்சி | சேவல்—பேடு |
| செம்படவன்—செம்படத்தி | காளை—கடாரி |
| பார்ப்பான்—பார்ப்பனத்தி | பிரமச்சாரி—கன்னிகை |

### அப்பியாசம் 4.

பால்மாற்றி எழுது.

1. எனது தம்பி பள்ளிக்கூடம் படிக்கிறான்.
2. எங்கள் வீட்டு வேலைக்காரி பெரிய கள்ளி.
3. என் குமாரத்தி தன் சிநேகிதியைத் தேடினாள்.
4. இவன் பிராமணாள் விடுதியில் சாப்பிடுகிறான்.
5. வித்துவான் நமது இராஜாவைப் புகழ்ந்தான்.
6. பணக்காரி தன் புத்திரி வர எதிர்பார்க்கிறாள்.
7. அநேக தேச சக்கரவர்த்தினிகள் இங்கு கூடினர்.
8. எளியவள் ஒருத்தி சில பசுக்களை வளர்க்கிறாள்.

### 11—3. எண்

பொருட்களின் எண்ணிக்கை. ஒருமை எண் அர், ஆர், கள், மார், ர், வை விகுதிகளில் ஒன்றை ஏற்றுப் பன்மையாகும்.

பன்மையாகும் விதம்.

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| கிளை | கிளைகள் | குரு | குருமார் |
| அணு | அணுக்கள் | | குருமார்கள் |
| பந்து | பந்துக்கள் | பெரியது | பெரியவை |
| | பந்துகள் | | |

| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| கலம் | கலங்கள் | அவன் | அவர் |
| வில் | விற்கள் | | அவர்கள் |
| புள் | புட்கள் | மற்றவள் | மற்றவர் |
| முள் | முட்கள் | | மற்றவர்கள் |
| நல்லான் | நல்லார் | துரை | துரைகள் |
| | நல்லோர் | | துரைமார் |
| | | இருந்தது | இருந்தன |
| | | ஓடிற்று | ஓடின |

குறிப்பு 1. மரியாதை ஒருமையில் அவர், இவர், எவர், என்றும், நந்தனர் ஔவையார், அண்ணியார், மாமனர் என்றும் அர், அல்லது ஆர் விகுதி பெற்றுவரும்.

குறிப்பு 2 ஆர் என்னும் விகுதி ஓ எனவும் திரிந்து வரும். நல்லார் —நல்லோர்.

## அப்பியாசம் 5.

### எண் மாற்றிஎழுது.

1. வேடன் வலையினல் கொக்குப் பிடித்தான்.
2. கண்டதும் கேட்டதும் சொல்லற்க.
3. நீ உன் சிநேகிதனேடு சம்பாஷணை செய்கின்ருய்.
4. எப்பேர்பட்டவர்களும் முடிவிலே நியாயத்தீர்ப்புப் பெறுவர்.
5. பசுக்கள் பால் தருகின்றன.
6. துஷ்டர்கள் பிராணிகளை வதைக்கிருர்கள்.
7. அப்பூக்களைக் கொய்து இங்கு கொண்டுவா.
8. மாடுகளும் குதிரைகளும் வண்டி இழுக்கின்றன.

## 11—4. இடம்

சொற்கள் வழங்கும் தானம். வினைமுற்றின் இடமானது அதன் ஈற்றில் நிற்கும் விகுதியால் உணர்த்தப்படும்.

1. தன்மை வினைமுற்று விகுதி என், ஓம்.
2. முன்னிலை .. .. ஐ, ஆய், ஈர், ஈர்கள்.
3. படர்க்கை .. .. அன், ஆன், அள், ஆள், அர். ஆர், கள், து, று, அ.

| இடப் பெயர்கள். | இடம் உணர்த்தும் வினை முற்றுக்கள். | |
|---|---|---|
| நான் | வந்தேன். | தன்மை ஒருமை |
| நாங்கள் | வந்தோம். | தன்மைப் பன்மை |
| நீ | வந்தாய். | முன்னிலை ஒருமை |
| நீ | வந்தனை. | .... .... |
| நீங்கள் | வந்தீர்கள். | முன்னிலைப் பன்மை |
| அவன் | வந்தான். | படர்க்கை ஆண்பால் |
| அவள் | வந்தாள். | .... பெண்பால் |
| அவர்கள் | வந்தார்கள். | .... பலர்பால் |
| அது | வந்தது. | .... ஒன்றன்பால் |
| அவை | வந்தன. | ... பலவின்பால் |

## அப்பியாசம் 6,

### கேள்விக்கேற்ற விடை தருக.

1. இராமன் பாடசாலையை விட்டனன்.
   (நீ என்றும், அவர்கள் என்றும் தொடங்கு)
2. நான் உங்களைப் பார்க்க வந்தேன்.
   (முன்னிலைப் பன்மை, தன்மைப் பன்மை எழுவாயாக்கு)
3. நீ எங்களைப் பார்க்க வந்திலை.
   (படர்க்கை ஆண்பால் எழுவாயாக்கு)
4. அவன் தன் வீட்டில் அவர்களை உபசரித்தான்.
   (எழுவாய்) (1) முன்னிலை ஒருமை (2) படர்க்கைப்பலர் பாலில் இருக்கட்டும்.
5. சோலை மரங்களை ஏன் வெட்டினீர்கள்.?
   (முன்னிலை ஒருமை வாக்கியமாக்கு)

6. நீங்கள் அவனைக் காவலில் போட்டீர்கள்.
(படர்க்கைப்பலர் பாலில் எழுது)

7. நீர் எங்களை அழைத்துக்கொண்டு போனீர்.
(அவர் என்பதை எழுவாயாக்கு)

## 12. வேற்றுமை

பெயரின் பொருளை வேறுபடுத்துவது. பெயரின் எட்டு வேற்றுமைகளும் அதனதன் ஈற்றில் நிற்கும் உருபுகளாலும் சொல்லுருபுகளாலும் உணர்த்தப்படும்.

### 12—1. முதலாம் வேற்றுமை

பெயரின் இயல்பு. ஆனவன், ஆனது, என்பது போல்வன அதன் சொல்லுருபுகள். அது வினை, பெயர், வினாக்களில் ஒன்றைக்கொண்டு முடியும்.

| | | |
|---|---|---|
| 1. | கந்தன் வந்தான் | தெரிநிலை வினை முடிபு |
| | கந்தன் நல்லவன் | குறிப்பு வினை முடிபு. |
| 2. | இஃது என் வீடு | பெயர் முடிபு. |
| 3. | கந்தன் என்பவன் யார்? | வினா முடிபு |

### 12—2. இரண்டாம் வேற்றுமை

இதன் உருபு ஐ. எவ்வேற்றுமை உருபும் விரிந்தும் தொகுத்தும் நிற்கும். இரண்டன் உருபு ஆறு பொருளை உணர்த்தும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆக்கல் | கத்தியைச்செய் | கத்திசெய். |
| 2. | அழித்தல் | எலியைக்கொல் | எலி பிடி. |
| 3. | அடைதல் | ஊரைச்சேர் | ஊர்சேர் |
| 4. | நீத்தல் | நாட்டை விடு | நாடு விடு |
| 5. | ஒத்தல் | புலியை நிகர்ந்தான் | புலி நிகர் |
| 6. | உடைமை | மக்களையுடையான் | மக்கள் உடையான் |

### 12—3. மூன்றாம் வேற்றுமை

இதன் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, என்பன. உடன்

கொண்டு என்பன அதன் சொல்லுருபுகள், அது கருவி, கர்த்தா, உடனிகழ்ச்சிப் பொருளை உணர்த்தும்

(அ) கருவி கர்த்தாவின் தொழிலுக்குச் சாதனையாயிருப்பது.

அது முதற்கருவி, துணைக்கருவி, என இருவகைப்படும்.

(1) முதற்கருவி காரியமாகமாறி அதினின்றும் வேறுபடாது.

(2-ம்) பொன்னால் கடுக்கன் செய்தான். பொன் முதற்கருவி.

துணைக்கருவி முதற்கருவி காரியப்படுமளவும் கர்த்தாவுக்குத் துணையாய் நின்று பின்பு பிரிவது

(2-ம்) ஆயுதங்களால் கடுக்கன் செய்தான். ஆயுதம் துணைக்கருவி

(ஆ) கர்த்தா தொழிலில் சுதந்தரமுடைய பொருள்.

அது இயற்றுதல் கர்த்தா, ஏவுதல் கர்த்தா என இருவகைப்படும்.

(1) இயற்றுதல் கர்த்தா தொழிலைத்தானே நேராகச்செய்யும் கர்த்தா.

(உ-ம்) கம்மாளர்களால் ஆன கோவில்.

கம்மாளர்—இயற்றுதல் கர்த்தா.

ஏவுதல் கர்த்தா தொழிலைத் தானே நேராகச் செய்யாமல் அதைப் பிறரால் செய்விக்கும் கர்த்தா.

(உ-ம்) அரசனால் ஆன கோவில். அரசன் ஏவுதல் கர்த்தா.

(இ) உடனிகழ்ச்சி

வினைகொண்டு முடிகிற எழுவாயின் தொழிலைத் தன்னிடத்தும் உடன் நிகழ்கிறதாய் உணர்த்துவது.

(உ-ம்) பசுவோடு கன்று வந்தது. பசு உடனிகழ்ச்சிப் பொருள்

3 ம் வேற். தொகை—கல்லெறிந்தான். வினைப்பயன்

## 12—4. நான்காம் வேற்றுமை

இதன் உருபு கு என்பது. ஆக, பொருட்டு என்பன அதன் சொல்லுருபுகள். அது உணர்த்தும் பொருள் ஏழு,

1. கொடை — ஏழைகளுக்குக் கொடு.
2. பகை — பாம்புக்குப் பகை கருடன்.
3. நேர்ச்சி.(சிநேகம்) — யாவர்க்கும் நண்பர் கடவுள்.
4. தகுதி — கல்விக்கு அழகு கசடற மொழிதல்.
5. அதுவாதல். அது (மற்றது ஆதல்) — கடுக்கனுக்குப் பொன் கொடு.
6. பொருட்டு — கூலிக்கு வேலையுண்டோ ?
7 முறை — தாய்க்கு மகள் உதவுவாள்.

4-ம் வேற். தொகை—கோடி மரம், சொல் இலக்கணம்.

## 12—5. ஐந்தாம் வேற்றுமை

இதன் உருபுகள் இல், இன், என்பன. நின்று, இருந்து, விட, காட்டிலும், பார்க்கிலும், என்பன அதன் சொல்லுருபுகள். இல், இன், விட முதலியவை பண்பின் ஏற்றத்தாழ்வுகளை உணர்த்தும். அது உணர்த்தும் பொருள் நான்கு.

1. நீங்கல் — மலையின் வீழ் அருவி.
2. ஒப்பு (ஒப்பிடுதல்) — பூனையிற் பெரியது புலி.
3. எல்லை — மதுரையின் வடக்கு சிதம்பரம்.
4. ஏது (காரணம்) — கல்வியிற் பெரியவர் கம்பவர்.

5-ம் வேற். தொகை—மலை வீழ் அருவி. குளக் கழிவு நீர்.

## 12—6. ஆறாம் வேற்றுமை

இதன் உருபுகள் அது, ஆது, உடைய என்பனவாம். இதன் பொருள் தற்கிழமையில் ஐந்தும், பிறிதின் கிழமையில் மூன்றுமாம்.

தற்கிழமை தன்னோடு பொருந்திய வற்றின் உரிமை.
பிறிதின்கிழமை தன்னோடு பொருந்தாதவற்றின் உரிமை.

தற்கிழமை

1. பண்பு (அ) குணப்பண்பு கல்லினது கடினம்.
(ஆ) தொழிற் பண்பு நல்லோரது வரவு.
2. உறுப்பு இராமனது கை.
3. ஒன்றன் கூட்டம்(ஒரே இனக்கூட்டம்) நெல்லினது குப்பை.
4. பலவினீட்டம் (பல இனக் கூட்டம்) மிருகங்களினது சஞ்சாரம்.
5. திரிபினாக்கம் (திரிந்து ஆகுதல்) புகையிலையினது பொடி.

பிறிதின் கிழமை

1. பொருள் இராமனது சட்டை.
2. இடம் இராமனது வீடு.
3. காலம் இராமனது வேளை.

6-ம் வேற். தொகை—இராமன் வீடு. புகையிலைப்பொடி.

## 12—7. ஏழாம் வேற்றுமை

இதன் உருபுகள் இல், இடம், கண் என்பன. அது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறும் தற்கிழமை, பிறிதின் கிழமை இரண்டிலும் பொருள் உணர்த்தும்.

| | | தற்கிழமை | பிறிதின் கிழமை |
|---|---|---|---|
| 1. | பொருள் இடமான | மணியில் ஒலி | பாலில் ஈ |
| 2. | இடம் ,, | சுவரில் வெடிப்பு | வெடிப்பில் பாம்பு. |
| 3. | காலம் ,, | நாளில் நாழிகை | ஆடியில் பாதிரி பூத்தது. |
| 4. | சினை ,, | கையில் விரல் | விரலில் மோதிரம். |
| 5. | குணம் ,, | கறுப்பில் அழகு | இளமையில் செல்வம். |
| 6. | தொழில் ,, | ஓட்டத்தில் அடி பெயர்த்தல். | ஓட்டத்தில் சண்டை. |

7-ம் வேற். தொகை—கைப்பணம். தலை மயிர்.

## 12—8. எட்டாம் வேற்றுமை

பெயரின் விகாரமே. அது படர்க்கைப்பொருளை முன்னிலையாக விளிக்கும் பொருள் உளது. விளி = அழை.

அதன் உருபுகளாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | ஈறுதிரிதல் | அம்மை | அம்மா! |
| 2. | ஈறுகெடுதல் | நாடன் | நாட! |
| 3. | ஈறுமிகுதல் | மகன் | மகனே! |
| 4. | ஈற்று அயல்திரிதல் | மக்கள் | மக்காள்! |
| 5. | இயல்பாதல் | தம்பி | தம்பி! |

### அப்பியாசம் 7.

பெயரின் வேற்றுமையும் அதன் பொருளும் தருக.

வீட்டைக்கட்டினன் ... பனையில் ஓலை ... யானையிற் பெரியது இரும்பினது தாள் ...இராமன் மகன்...தாலிக்குத் தங்கம் ... எட்டியினும் கசப்பு...ஓட்டத்தில் ஆட்டம்...கந்தன் புத்தகம் ... கத்தியால் வெட்டினன்...புகழ்ச்சிக்குப் புகழ்ச்சி...நகரை விட்டனள்.

## 13. விளியேலாப்பெயர்கள்

தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், சுட்டுப்பெயர், வினைப்பெயர், தான், தாம் என்னும் பொதுப்பெயர்கள் விளிக்கப்படா.

## 14. வேற்றுமைகளும் சாரியைகளும்

முதலாம், எட்டாம் வேற்றுமைகள் சாரியை பெறா. மற்ற வேற்றுமைகள் அன், இன், அ, அத்து, அற்றுச் சாரியைகளில் ஒன்றைப்பெற்றும், பெறாதும் உருபு ஏற்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | + | சாரியை | + | உருபு |
| 1. அதனை | = | அது | + | அன் | + | ஐ |
| 2. பலவற்றை | = | பல | + | அற்று | + | ஐ |
| 3. பனையினால் | = | பனை | + | இன் | + | ஆல் |

4. எனக்கு = என் + அ + கு
5. குளத்தில் = குளம் + அத்து + இல்
5. அவற்றின் = அவை + அற்று + இன்
6. அவற்றினது = அவை + (அற்று+இன்) + அது

## அப்பியாசம் 8.

எட்டு வேற்றுமையும் கூறு.

மேசை, நாக்கு, அணை, வரம்பு, கண், தளம், கம்பு.

### பழைய பாடத்தில் கேள்விகள்.

1. வேற்றுமை ஏற்ற பெயர்ச்சொற்கள் எதைக்கொண்டு முடிகின்றன?
2. தன்மைப்பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் வேற்றுமை ஏற்கும் விதம் என்ன?
3. பெயர்ச் சொல்லுக்கு இலக்கணம் கூறும் விதம் என்ன?
4. இரண்டாம், ஐந்தாம், ஏழாம் வேற்றுமை கொடு.

யான், நீர், குளம், பெரியவை, எவை, யாவை.

## IV. வினையியல்

### பழைய பாடத்தில் கேள்விகள்.

1. பெயர்ச்சொல், வினைச் சொற்களின் பேதம் என்ன?
2. தெரிநிலைவினை, குறிப்பு வினையாவது என்ன?
3. உடன்பாட்டு வினையென்றால் என்ன.
4. தெரிநிலை உடன்பாடு, தெரிநிலை எதிர்மறைகளுக்கு உதாரணம் கொடு.
5. காலங்கள் எத்தனை. அவை எவ்வாறு உணர்த்தப்படும்?
6. பெயரெச்சம், வினையெச்சங்களுக்கு வகைக்கு மூன்று உதாரணம் கொடு.
7. வினையாலணையும் பெயராவது என்ன?

## 15. வினைச்சொல் வகைகள்

• தெரிநிலை, குறிப்பு வினைகள் உடன்பாட்டிலும் எதிர் மறையிலும் தொழிலை உணர்த்தும். தெரிநிலை வினையானது செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றா வினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை என வகுக்கப்படும்.

### 15—1. தெரிநிலை வினைமுற்று

செயலையும், காலத்தையும், செய்பவன் முதலியவைகளையும் வெளிப்படையாய் உணர்த்துவது.

படித்தேன், படிக்கிறேன், படிப்பேன்.
படித்திலேன், படிக்கின்றிலேன், படியேன்.

### 15—2. குறிப்பு வினைமுற்று

காலத்தை வெளிப்படையாய் உணர்த்தாமல் குறிப்பாய் உணர்த்துவது.

அதற்குப் பொருளாதி அறுவகைப் பெயர்களும், பண்பால் வருபெயர்களும் பெயர்ப்பயனிலையாய் நிற்கும்

| | |
|---|---|
| இது பொன் | இது பொன்னிலது. |
| அவன் பொன்னன் | அவன் பொன்னனிலன். |
| இவள் நல்லவள் | அவள் நல்லவளிலள். |

பொன், பொன்னன், நல்லவள் என்பன உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுக்கள். முன், இப்போது, இனி என்னும் குறிப்பால் காலம் காட்டுகின்றன. பொன்னிலது, பொன்னனிலன், நல்லவளிலள் என்பன எதிர்மறைக் குறிப்பு வினை முற்றுகள்.

### 15—3. செயப்படுபொருள் குன்றிய வினை

கர்த்தாவின் தொழிலை அடையும் பொருள் இல்லாதது.

| | | |
|---|---|---|
| சிரித்தேன், | சிரிக்கின்றேன், | சிரிப்பேன். |
| சிரித்திலேன், | சிரிக்கின்றிலேன், | சிரியேன். |

### 15—4. செயப்படுபொருள் குன்றா வினை

கர்த்தாவின் தொழிலை அடையும் பொருள் உள்ளது.

| | | |
|---|---|---|
| செய்தான், | செய்கின்றான், | செய்வான். |
| செய்திலன், | செய்கின்றிலன், | செய்யான். |

### 15—5. தன்வினை

தன் கர்த்தாவால் தொழில் நடைபெறுதலை அல்லது பெறுதலை உணர்த்துவது.

| | | |
|---|---|---|
| படித்தேன், | படிக்கின்றேன், | படிப்பேன். |
| படித்திலேன், | படிக்கின்றிலேன், | படியேன். |

### 15—6. பிறவினை

கர்த்தாவின் தொழில் பிற கர்த்தாவால் நடை பெறுதலை அல்லது பெறுதலை உணர்த்துவது.

| | | |
|---|---|---|
| படிப்பித்தேன், | படிப்பிக்கின்றேன், | படிப்பிப்பேன். |
| படிப்பித்திலேன், | படிப்பிக்கின்றிலேன், | படிப்பியேன். |

குறிப்பு. தன்வினை பிறவினையாகும் விதம்

தன்வினை (1) வி, பி, கு, சு, டு, து, பு, று, விகுதிகளில் ஒன்றை யேற்றும், (2) தன்வினையின் மெல்லெழுத்தை வல்லெழுத்தாக்கியும், (3) தன்வினையின் ஈற்று வல்லெழுத்தை இரட்டித்தும் பிறவினையாகிறது.

| | | | |
|---|---|---|---|
| (1) வி. | செய்...செய்வி | டு. | சுருள்...சுருட்டு |
| பி. | கல்...கற்பி | து. | இரு...இருத்து |
| கு. | போ...போக்கு | பு. | பர...பரப்பு |
| சு. | பாய்...பாய்ச்சு | று. | பயில்...பயிற்று |

(2) எழும்பு...எழுப்பு நீங்கு...நீக்கு

(3) ஓடு...ஓட்டு உருகு...உருக்கு

## 15—7. செய்வினை

கர்த்தா தானாகவாவது பிற கர்த்தாவைக் கொண்டாவது ஒரு தொழிலைச் செய்தது அல்லது செய்திலது என்று உணர்த்துவது

த. வி. கட்டினோம் ... கட்டுகின்றோம் ... கட்டுவோம்

த. வி. கட்டிலோம் ... கட்டுகின்றிலோம்...கட்டோம்

பி. வி. கட்டுவித்தோம்...கட்டுவிக்கின்றோம்...கட்டுவிப்போம்

பி. வி. கட்டுவித்திலோம்...கட்டுவிக்கின்றிலோம்...கட்டுவியோம்

## 15—8. செயப்பாட்டு வினை

கர்த்தாவுக்கு ஏதோ செய்யப்பட்டது அல்லது செய்யப் பட்டிலது என்று உணர்த்துவது.

கட்டுண்டேன், கட்டுண்கிறேன், கட்டுண்பேன்.
கண்டுண்டிலேன், கண்டுண்கின்றிலேன், கண்டுண்னேன்.
குறிப்பு:- படு, உண் என்பன செயப்பாட்டு வினை விகுதிகள்.

## அப்பியாசம் 9.

ஒவ்வொன்றும் எவ்வகை வினை முற்றாகும்.

எடுத்தான், நடுகின்றிலன், படியான், செய்திலள், நடந்தது, கூவிற்று, குரைத்தன நடப்பிப்பார், அழுதாள், ஓடினேன், கட்டுவி, ஒப்புவித்திலன், அது நல்லது, கத்தி கூரியது, பார்த்தாய்,

பழைய பாடத்தில் கேள்விகள்.

1. வினைமுற்றின் மூன்று முக்கிய பாகங்கள் எவை ?
2. காலங்கள் எவைகளால் உணர்த்தப்படும் ?
3. இறந்தகால, எதிர்கால இடை நிலைகளைச்சொல்லு.

### 16—1. வினையின் உறுப்புக்கள்

பகுதி, இடைநிலை, விகுதி முதலியன.

1. பகுதி:- வினைச்சொல்லின் முதலில் பகாப்பதமாக நிற்கும் ஏவல் வினைமுற்று.
படி, நட, வா, போ, இரு, செய்.

2. இடைநிலை:-பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் காலத்தை உணர்த்தும்படி நிற்கும் இடைச்சொல்.
த், ட், ற், இன் — கிறு, கின்று — ப், வ்.

3. விகுதி:- வினைச்சொல்லின் ஈற்றில் நிற்கும் இடைச்சொல்.
என், ஒம்—ஐ, ஆய், ஈர், ஈர்கள்—அன், ஆன், து, று; அ—உ, இன், ஆல், ஆய் முதலியன.

### 16—2. காலம்

தொழில் நிகழ்ச்சியின் வேளையை உணர்த்துவது. அது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும்.

### 16—2. (அ) இறந்தகாலம்

தொழில் நிகழ்ச்சி நடந்துவிட்டதாக உணர்த்துவது.

த், ட், ற், இன் இறந்தகால இடைநிலைகள்,

| | |
|---|---|
| செய்தேன் | செய்+த்+என் |
| கண்டோம் | காண்+ட்+ஒம் |
| நின்றாய் | நில்+ற்+ஆய் |
| ஓடினீர் | ஓடு+இன்+ஈர் |

குறிப்பு:- இடைநிலை விகுதியோடு பொருந்தி நிற்கும். அப்போது பகுதி முதலியவற்றில் மாறுதல்கள் நேரிடலாம்.

### 16—2. (ஆ) நிகழ்காலம்

தொழில் நிகழ்ச்சி இப்போது நடந்தேறுகிறதாக உணர்த்துவது. கிறு, கின்று நிகழ்கால இடைநிலைகள்.

| | |
|---|---|
| நடக்கிறான் | நட + கிறு + ஆன் |
| உண்கின்றான் | உண் + கின்று + ஆன் |

குறிப்பு:- இடைநிலையின் உகரம் கெட்டது சந்தி.

## 16—2. (இ) எதிர்காலம்

தொழில் நிகழ்ச்சி இனி நடப்பதாக உணர்த்துவது.

ப், வ் எதிர்கால இடைநிலைகள்.

| | |
|---|---|
| வருவார் | வா + வ் + ஆர் |
| படிப்பார்கள் | படி + ப் + ஆர்கள் |

குறிப்பு:- [1] வா என்பது வருவென விரிந்தது.

[2] இடைநிலை ப் இரட்டினது சந்தி.

## 16—3. எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று

அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகளோடு மூவிடம் ஐம்பாலுக்குமுரிய விகுதிகள், வினைப் பகுதியோடும், இறந்தகால, நிகழ்கால இடைநிலைகளோடும் புணர்ந்தும்; பகுதியும், விகுதியும் இடைநிலையின்றிப்புணர்ந்தும் உண்டாவது.

| | | |
|---|---|---|
| படித்திலேன், | படிக்கின்றிலேன், | படியேன் |
| பார்த்திலீர், | பார்க்கின்றிலீர், | பாரீர் |
| நடந்திலன், | நடக்கின்றிலன், | நடவான் |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| படி | + | த் | + | இல் | + | என் | = | படித்திலேன். |
| பார் | + | கின்று | + | இல் | + | ஈர் | = | பார்க்கின்றிலீர். |
| நட | + | — | + | | | ஆன் | = | நடவான். |

220419

T3 P31 (6) N32

## தெரிநிலை வினைமுற்றுக்கள்

| | இடம் | எண் | காலம் | உடன்பாடு | எதிர்மறை | தன்வினை, செய்வினை, குன்று வினைமுற்று. | பிறவினை வினை முற்று | செயப்பாட்டு வினை வினை முற்று |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | த. | ஒ. | இ. | உ | | உண்டேன் | உண்பித்தேன் | உண்ணப்பட்டேன் |
| | | | | | எ | உண்டிலேன் | உண்பித்திலேன் | உண்ணப்பட்டிலேன் |
| | த. | ப | இ. | உ | | உண்டோம் | உண்பித்தோம் | உண்ணப்பட்டோம் |
| | | | | | எ | உண்டிலோம் | உண்பித்திலோம் | உண்ணப்பட்டிலோம் |
| 2 | மு. | ஒ | இ. | உ | | உண்டாய் | உண்பித்தாய் | உண்ணப்பட்டாய் |
| | | | | | எ | உண்டிலாய் | உண்பித்திலாய் | உண்ணப்பட்டிலாய் |
| | மு. | ப. | இ. | உ | | உண்டீர் | உண்பித்தீர் | உண்ணப்பட்டீர் |
| | | | | | எ | உண்டிலீர் | உண்பித்திலீர் | உண்ணப்பட்டிலீர் |
| 3 | ப. | ஆ. | இ. | உ | | உண்டான் | உண்பித்தான் | உண்ணப்பட்டான் |
| | | | | | எ | உண்டிலன் | உண்பித்திலன் | உண்ணப்பட்டிலன் |
| | ப | ஒ. | இ. | உ | | உண்டது | உண்பித்தது | உண்ணப்பட்டது |
| | | | | | எ | உண்டிலது | உண்பித்திலது | உண்ணப்பட்டிலது |
| | ப. | ப. | இ. | உ | | உண்டன | உண்பித்தன | உண்ணப்பட்டன |
| | | | | | எ | உண்டில | உண்பித்தில | உண்ணப்பட்டில |

## தெரிநிலை வினைமுற்றுக்கள்

| | இடம் | எண் | காலம் | உடன்பாடு | எதிர்மறை | தன்வினை, செய்வினை, தன்று வினைமுற்று. | பிறவினை வினை முற்று | செயப்பாட்டு வினை வினை முற்று |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | த. | ஒ | நி. | உ | | உண்கிறேன் | உண்பிக்கிறேன் | உண்ணப்படுகிறேன் |
| | | | | | எ | உண்கின்றிலேன் | உண்பிக்கின்றிலேன் | உண்ணப்படுகின்றிலேன் |
| | த. | ப | நி. | உ | | உண்கிறோம் | உண்பிக்கிறோம் | உண்ணப்படுகிறோம் |
| | | | | | எ | உண்கின்றிலோம் | உண்பிக்கின்றிலோம் | உண்ணப்படுகின்றிலோம் |
| 2 | மு. | ஒ | நி. | உ | | உண்கிறாய் | உண்பிக்கிறாய் | உண்ணப்படுகிறாய் |
| | | | | | எ | உண்கின்றிலாய் | உண்பிக்கின்றிலாய் | உண்ணப்படுகின்றிலாய் |
| | மு. | ப. | நி. | உ | | உண்கின்றீர் | உண்பிக்கின்றீர் | உண்ணப்படுகின்றீர் |
| | | | | | எ | உண்கின்றிலீர் | உண்பிக்கின்றிலீர் | உண்ணப்படுகின்றிலீர் |
| 3 | ப. | பெ | நி. | உ | | உண்கிறாள் | உண்பிக்கிறாள் | உண்ணப்படுகின்றாள் |
| | | | | | எ | உண்கின்றிலள் | உண்பிக்கின்றிலள் | உண்ணப்படுகின்றிலள் |
| | ப | ப. | நி. | உ | | உண்கிறார் | உண்பிக்கிறார் | உண்ணப்படுகின்றார் |
| | | | | | எ | உண்கின்றிலர் | உண்பிக்கின்றிலர் | உண்ணப்படுகின்றிலர் |
| | ப. | ஒ | நி. | உ | | உண்கிறது | உண்பிக்கிறது | உண்ணப்படுகின்றது |
| | | | | | எ | உண்கின்றிலது | உண்பிக்கின்றிலது | உண்ணப்படுகின்றிலது |
| | ப. | ப. | நி. | உ | | உண்கின்றன | உண்பிக்கின்றன | உண்ணப்படுகின்றன |
| | | | | | எ | உண்கின்றில | உண்பிக்கின்றில | உண்ணப்படுகின்றில |

## தெரிநிலை வினைமுற்றுக்கள்

| | இடம் | எண் | காலம் | உடன்பாடு | எதிர்மறை | தன்வினை, செய்வினை, குன்றா வினைமுற்று. | பிறவினை வினை முற்று | செயப்பாட்டு வினை வினை முற்று |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | த. | ஒ. | எ | உ | | உண்பேன் | உண்பிப்பேன் | உண்ணப்படுவேன் |
| | | | | | எ | உண்ணேன் | உண்பியேன் | உண்ணப்படேன் |
| | த. | ப. | எ | உ | | உண்போம் | உண்பிப்போம் | உண்ணப்படுவோம் |
| | | | | | எ | உண்ணோம் | உண்பியோம் | உண்ணப்படோம் |
| 2 | மு. | ஒ | எ | உ | | உண்பாய் | உண்பிப்பாய் | உண்ணப்படுவாய் |
| | | | | | எ | உண்ணாய் | உண்பியாய் | உண்ணப்படாய் |
| | மு. | ப. | எ | உ | | உண்பீர் | உண்பிப்பீர் | உண்ணப்படுவீர் |
| | | | | | எ | உண்ணீர் | உண்பியீர் | உண்ணப்படீர் |
| 3 | ப. | ஆ | எ | உ | | உண்பான் | உண்பிப்பான் | உண்ணப்படுவான் |
| | | | | | எ | உண்ணான் | உண்பியான் | உண்ணப்படான் |
| | ப | ஒ. | எ | உ | | உண்ணும் | உண்பிக்கும் | உண்ணப்படும் |
| | | | | | எ | உண்ணாது | உண்பியாது | உண்ணப்படாது |
| | ப. | ப. | எ | உ | | உண்ணும் | உண்பிக்கும் | உண்ணப்படும் |
| | | | | | எ | உண்ணா | உண்பியா | உண்ணப்படா |

## 17. பெயரெச்சம்

### 17—1. தெரிநிலைப் பெயரெச்சம்

வினையடியாய்த் தோன்றி செயலையும் காலத்தையும் உணர்த்திச் செய்பவனை உணர்த்தாமல் பெயர் முடிவு பெறுவது.

### 17—2. உடன்பாட்டுத் தெரிநிலைப் பெயரெச்சம்

(அ.) இறந்தகாலம் நிகழ்காலங்களில் வினைப்பகுதி அதனதன் இடைநிலைகளோடு அகரவிகுதி புணர்ந்து வருவது.

இறந்த, பெ. எ. படித்த, வந்த, ஓடின.
நிகழ், பெ. எ. படிக்கிற, வருகின்ற, ஓடுகிற

குறிப்பு. வந்த என்பதில் இடைநிலை இரட்டித்து (த்த்) அவைகளில் ஒன்று ந் ஆனது சந்தி — படித்த என்பதில் இடைநிலை இரட்டித்தது சந்தி.

(ஆ) எதிர்காலத்தில் வினைப்பகுதி உம் விகுதி புணர்ந்தும், சிறுபான்மை கு சாரியை பெற்றும் வருவது.

வரும், ஓடும், படிக்கும், படி + கு + உம்

குறிப்பு. ஓடும் என்பதில் பகுதியும் விகுதியும் புணர்ந்தன. உம் விகுதி தானுய்க் காலம்காட்டும்

படிக்கும் என்பதில் கு சாரியை.

### 17—3. எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சம்

வினைப்பகுதியோடு ஆகார விகுதியும், தகர எழுத்துப் பேறும், அகர விகுதியும் புணர்ந்து வருவது.

படியாத, வாராத, ஓடாத, ஓடு + ஆ + த் + அ

### 17—4. உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சம்

பண்படிகளோடு அ, இய விகுதிகளில் ஒன்று புணர்ந்து காலத்தைக் குறிப்பாய் உணர்த்திப் பெயர் முடிபு பெறுவது.

நல்ல, தீய, பெரிய, சிறிய, கரிய, வலிய.
நல்ல பையன், தீய செயல், கரிய பூனை.

### 17—5. எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்

எதிர்மறைப் பண்படிகளான அல், இல் என்பனவற்றோடு ஆகார விகுதியும், தகர எழுத்துப்பேறும், அகர விகுதியும் பெற்றுப் பெயர் முடிபு பெறுவது.

அல்லாத இல்லாத (இல்+ஆ+த்+அ)

(நல்லது) அல்லாத காரியம். (பொருள்) இல்லாத மனுஷன்.

## 18. வினையெச்சம்

### 18—1. உடன்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம்

செயலையும் காலத்தையும் உணர்த்திச் செய்பவனை உணர்த்தாமல் வேறு வினை முடிபு பெறுவது.

(அ) அது இறந்தகாலத்தில் வினைப்பகுதியோடு இறந்தகால இடைநிலையும் உகர விகுதியும் புணர்ந்தும், ய், இ, விகுதிகள் இடைநிலையின்றிப் புணர்ந்தும் வருவது.

| | |
|---|---|
| படித்து | படி + த் + உ |
| போய் | போ + — + ய் |
| ஓடி | ஓடு + — + இ |

(ஆ) அது நிகழ்காலத்தில் வினைப்பகுதியோடு அகர விகுதி அல், கு சாரியைகளில் ஒன்றைப் பெற்றும், பெறாதும் வருவது.

| | |
|---|---|
| படிக்க | படி + கு + அ |
| ஓட | ஓடு + — + அ |
| ஓடற்கு | ஓடு + அல் + கு |

(இ) அது எதிர்காலத்தில் வினைப் பகுதியோடு இன், ஆல், விகுதிகள் கு, து, இன் சாரியைகளில் ஒன்றைப் பெற்றும் பெறாதும் வருவதோடு கால் விகுதி து, அ சாரியைகளைப் பெற்றும் வருவது.

| | |
|---|---|
| படிக்கின் | படி + கு + இன் |
| வரின் | வா + — + இன் |
| ஓடினுல் | ஓடு + இன் + ஆல் |
| படித்தால் | படி + த + ஆல் |
| விட்டால் | விடு + — + ஆல் |
| உண்டக்கால் | உண் + (த + அ) + கால் |
| இருந்தக்கால் | இரு (த + அ) + கால் |

18—3. எதிர்மறைத்தெரிநிலை வினையெச்சம்.

வினைப்பகுதியோடு ஆகார விகுதியும், மல், மே, து, விட்டால், விடில் விகுதிகளில் ஒன்றும் புணர்ந்தும்; சிலவிடத்து உகர விகுதியும் தகர எழுத்துப்பேறும் பெற்றும் வருவது.

(உ-ம்) படியாமல், படியாமே, படியாவிட்டால்,

| | |
|---|---|
| படியாவிடில் | படி + ஆ + விடில் |
| படியாது | படி + ஆ + த் + உ |

19. உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம்

பண்படிகள் அகர விகுதிபெற்று, காலத்தைக் குறிப்பாய் உணர்த்தி வேறு வினை முடிபு பெற்று வருவது.

| | | |
|---|---|---|
| வலிய | மெல்ல | பைய |
| வலியப்பேசு | மெல்ல நட | பையச்செய் |

குறிப்பு:- ஆய் ஆக, ஆகின் என்ற வினையெச்சங்கள் பண்போடு புணர்ந்தும் தெரிநிலை வினையெச்சம் பிறக்கும்.

| | | |
|---|---|---|
| செம்மையாய், | செம்மையாக, | செம்மையாகின். |
| நன்ருய் | நன்ருக, | நன்ருகின். |

அப்பியாசம் 10.

எச்சங்களின் வகை, காலங்களை உரை.

கொன்ற, வரும், படித்தால், போக, செய்து, செய்யாத, நடக்கும், உண்ட, உண்டக்கால், செத்தால், போகாமல், வரின், இருந்து, உணர்ந்தால், பார்க்க, எழுதின, வளர்கின்ற, ஒடிந்தால் இடிக்க, கட்டாமல், காணுத.

## அப்பியாசம் 11.

செயப்படுபொருளை எழுவாயாக மாற்று.

செயப்படுபொருள் மறு வாக்கியத்தின் எழுவாயாகும் போது முந்தின வாக்கியத்தின் எழுவாய் மூன்றும் வேற்றுமை யாகும்.

1. உபாத்தியாயர் பாடம் கற்பிக்கிறார்.
2. மலையாளிகள் உத்திரங்களை அறுக்கிறார்கள்.
3. என் தகப்பனார் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்.
4. சிலர் நாடோறும் கடினவேலை செய்கின்றனர்.
5. மாலுமிகள் கப்பல்களை ஓட்டுகிறார்கள்.
6. கள்ளர் இராமனைப் பிடித்துக் கொன்றார்கள்.
7. மூங்கிற் பட்டைகளைத் தாளாக்குகிறார்கள்.

## 20. ஏவல் வினைமுற்று

கட்டளைப் பொருளை முன்னிலை இடத்தில் உணர்த்துவது. ஏவல் எதிர்காலத்தை உணர்த்தும்.

### 20—1. (அ) உடன்பாட்டு ஏவல் வினைமுற்று

வினைப்பகுதி ஒருமையில் ஆய், இ, விகுதிகளையும், பன்மையில் உம், ஈர், மின் விகுதிகளையும் புணர்ந்தும், புணர்ந்து கெட்டும் வருவது.

ஒருமை ஏவல்:- உண்ணாய், உண்ணுதி.

பன்மை ஏவல்:- உண்ணும், உண்மின், உண்ணீர்.

குறிப்பு:-[1] உடன்பாட்டு ஒருமை ஏவலில் விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதியே ஏவலாகவும் வரும்

நட, வா, படி, விடு, போ, செய்.

[2] உண்ணீர் என்பது உடன்பாட்டுப் பன்மை ஏவலாக உண்ணுங்கள் என்றும், எதிர்மறை ஏவலாக உண்ணாதிருப்பீர் என்றும் பொருள் படும்.

## 20—1. (ஆ) எதிர்மறை ஏவல் வினைமுற்று

• வினைப்பகுதி ஒருமையில் ஏல், அல், விகுதிகளில் ஒன்றையும், பன்மையில் அன் மின் (அல்+மின்) விகுதியையும் புணர்ந்து வருவது.

ஒருமை—உண்ணேல். பன்மை—உண்ணன்மின்.
செய்யல். செய்யன்மின்.

## 21. வியங்கோள் வினைமுற்று

இருதிணை, ஐம்பால், மூவிடங்களிலும் மரியாதையாய் ஏவற் பொருளை உணர்த்துவது. அது எதிர்காலத்தை உணர்த்தும்.

## 21. (அ) உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று

ஒருமை, பன்மைகளில் க, அ, இ, இய விகுதிகளை ஏற்று வரும்.

ஒருமை, பன்மை:- எழுதுக, மகிழ, வாழி, வாழிய.

## 21. (ஆ) எதிர்மறை வியங்கோள் வினைமுற்று

ஒருமை, பன்மைகளில் அற்க (அல் + க) விகுதியையும் ஏற்று வரும்.

ஒருமை, பன்மை:- உண்ணற்க, செய்யற்க.

### அப்பியாசம் 12.

சொல்இலக்கணம் என்றால் என்ன? கீழ்க்கண்ட வினைமுற்றுக்களின் திணை, பால், எண், இடம் என்ன?

ஓடுகின்றேன், நடந்தது, இருந்தோம், தின்பீர், உண்டாள், வருக, எழுதுமின், ஓடிற்று, படித்தவர், உடுத்திலன், செய்திலது, இருப்பான், நிற்கும்.

## 22. தொழிற்பெயர், வினையாலணையும்பெயர்

(10-ம் பகுதி அ, இ பிரிவுகளைப் பார்க்கவும்)

### 23. வினைகளுக்கு இலக்கணம் கூறும்விதம்

அணில்கள் மரங்களில் ஓடி விளையாடுகின்றன.

1. ஓடி (1) வகை:- தெரிநிலை வினை, உடன்பாடு, செயப்படுபொருள் குன்றியவினை, தன்வினை, செய்வினை (2) பொதுஇலக்கணம்:- இல்லை (3) காலம், ரூபம், முடிபு, இறந்தகால வினையெச்சம் விளையாடுகின்றன என்பதைக்கொண்டு முடிந்தது.

2. விளையாடுகின்றன. (1) வகை:- தெரிநிலைவினை, உடன்பாடு, செயப்படுபொருள் குன்றியவினை, தன்வினை, செய்வினை, (2) பொதுஇலக்கணம்:- அஃறிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை (3) காலம், ரூபம், முடிபு:- நிகழ்கால வினைமுற்று, அணில்கள் என்பதின் பயனிலை.

## V. இடையியல்

### 24. இடைச்சொல்

தனித்து வாராமல் பெயர் வினைகளின் இடையில் வருவது. அவையாவன:-

1. வேற்றுமை உருபுகள்:- ஐ, ஆல், கு, இன், அது, கண்.
2. விகுதிகள்:- ஏன், ஓம், ஆய், ஈர், அன், ஆன், ழி.
3. காலஇடைநிலைகள்:- த், ட், ற், இன், கிறு, கின்று, ப், வ்.
4. சாரியைகள்:- அம், அற்று, அத்து, இன், கு, து.
5, உவமை உருபுகள்:- போல, ஒப்ப, நேர, நிகர, மான, அனைய.
6. சுட்டெழுத்துக்கள்:- அ, இ, உ.
7. வினவெழுத்துக்கள்:- எ, யா, ஆ, ஓ, ஏ.
8. தத்தம் பொருள்உணர்த்தும் இடைச்சொற்கள்:- முன், பின், ஆனால், மேல், கீழ், ஆகையால், ஏனெனில்.

### 25. இடைச்சொல் உணர்த்தும்பொருள்.

1. ஒலிக்குறிப்பு:- கடகட, திடுதிடு, திண், கோ.
2. விரைவு குறிப்பு:- சரேல் என, விருட் என.
3. அச்சக் குறிப்பு:- ஐயோ, அடடா.
4. இகழ்ச்சிப்பொருள்:- சீ, சீசீ, பூ, சை.
5. வியப்புப் பொருள்:- அம்மம்மா, அப்பப்பா.

## VI. உரியியல்

### 26. உரிச்சொல்

பெயர் வினைகளைத் தழுவி அவைகளின் பண்பை உணர்த்துவது. அது பெயருரி வினையுரி என இருவகைப்படும். அவைகளில் சில ஒரே பொருளையும், சில பல பொருளையும் உணர்த்தும்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி, அற, என்பன மிகுதிப் பொருளை உணர்த்திப் பெயருரி வினையுரிகளாகும்.

| பெயருரி | வினையுரி |
|---|---|
| நனி பேதை. | நனி தின்றான். |
| அற வடக்கு முனை. | அறப்பேசு. |
| சாலப் பெரியோர். | சாலவும் நன்று. |

## VII. புணரியல்

### 27. புணர்ச்சி (சந்தி)

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றுபட்டுப் பொருந்துவது. அது வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகைப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொன் | + | மாலை | = | பொன்மாலை, | வேற். புணர் |
| சுடு | + | சோறு | = | சுடுசோறு, | அல்வழிப் புணர். |

### 28. வேற்றுமைப் புணர்ச்சி

நிலைமொழிக்கும் வழிமொழிக்கும் இடையில் வேற்றுமை உருபு விரிந்தும், மறைந்தும் வருவது.

வேற்றுமை உருபு வெளிப்பட்டு வருவது வேற்றுமை விரி, வேற்றுமை உருபு மறைந்து வருவது வேற்றுமைத் தொகை.

| தொகாநிலைத்தொடர் (தொகாத்தொடர்) | தொகைநிலைத்தொடர் (தொகைத்தொடர்) |
| --- | --- |
| 2.வேற். சோற்றைத் தின்றான் | சோறு தின்றான் |
| 3. ... வில்லால் தெறித்தான் | வில் தெறித்தான் |
| 4. ... கூலிக்கு வேலை | கூலி வேலை |
| 5. ... மலையினின்று வீழ்அருவி | மலைவீழ் அருவி |
| 6. ... கந்தனது புத்தகம் | கந்தன் புத்தகம் |
| 7. ... வீட்டில் சேர்ந்தான் | வீடு சேர்ந்தான் |

## 29, அல்வழிப் புணர்ச்சி.

வேற்றுமைப் புணர்ச்சி அல்லாத வழியில் சொற்கள் தொடர்வது. அது தொகைத்தொடர் ஐந்தும், தொகாத் தொடர் ஒன்பதுமாம். வேற்றுமை உருபில்லாத முதலாம், எட்டாம் வேற்றுமைகள் அல்வழிப் புணர்ச்சி.

### 29—1. ஐவகை அல்வழித் தொகைத் தொடர்கள்

வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை.

#### (அ) வினைத்தொகை

சுடுசோறு எறிஈட்டி கடிநாய்.

இவற்றில் கால இடைநிலைகள் தொக்கு நின்றன. சுட்ட சோறு, சுடுகின்ற சோறு, சுடும்சோறு என விரியும்.

#### (ஆ) பண்புத்தொகை

செங்கல், வட்ட மேஜை, பனைமரம்.

இவற்றில் ஆகிய என்னும் பண்புருபு தொக்கு நின்றது. செம்மையாகிய கல் என விரியும். இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையில் சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.

சாரைப்பாம்பு. சாரை—சிறப்புப்பெயர், பாம்பு—பொதுப்பெயர்.

### (இ) உவமைத்தொகை

மதிமுகம், அரிசிப்பல், குருட்டுக்கண்.

இவற்றில் உவமை உருபுகளில் ஒன்று தொக்கு நிற்கும். மதி போன்ற முகம் என விரியும்.

### (ஈ) உம்மைத்தொகை

இராப்பகல், உயிர்மெய், இராமர் இலட்சுமணர்.

இவற்றில் உம் என்ற இடைச்சொல் தொக்கு நிற்கும். இரவும் பகலும் என விரியும்.

### (ஐ) அன்மொழித்தொகை

தேன்மொழி வந்தாள். வருவாயுள் கால் வழங்கு.

இவற்றில் தேன்மொழி என்பது உவமைத்தொகை. அது வந்தாள் என்னும் குறிப்பினால் அம்மொழியினை யுடையவள் எனப் பொருள்பட்டு ஒரு பெண்ணை உணர்த்தி அன்மொழித் தொகையாயிற்று.

29—2. தொகாத்தொடர்கள் ஒன்பது அவை:-

| | | |
|---|---|---|
| 1. | எழுவாய்த் தொடர்:- | கந்தன் வந்தான். |
| 2. | விளித்தொடர்: | கந்தா! வா. |
| 3. | பெயரெச்சத்தொடர்:- (தெரிநிலை) | படித்த பையன். |
| | (குறிப்பு) | நல்ல பையன். |
| 4. | வினையெச்சத்தொடர்:- | வந்து போனான். |

5. வினைமுற்றுத்தொடர்:- வந்தான் இராமன்.
6. குறிப்பு வினைமுற்றுத்தொடர்:- பொன்னன் இவன்
7. இடைச்சொற்றொடர்:- மற்றொன்று (மற்று)
8. உரிச்சொற்றொடர்:- நனி பேதை.
9. அடுக்குத்தொடர்:- பாம்பு பாம்பு

### அப்பியாசம் 13.

தொடர்களின் இலக்கணம் கூறு

சாலப்பெரியோர், தீ தீ, விடுகணை, துடியிடை, நடந்து வந்தான், போயிற்று பிணி, கெட்ட பிள்ளை, பாடும் கிளி, சதுரக்கல், ஒன்றே கால், கந்தன் வீடு, இராமன் மகன், தாய் தந்தை, காடு அடைந்தார், செங்கோல்.

### 30. எழுத்துப்புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும், வருமொழியின் முதலும் ஒன்றுபட்டுப் பொருந்துவது. அது இயல்புப்புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

விகாரமில்லாமல் இயல்பாய்ப் பொருந்துவது இயல்புப் புணர்ச்சி. நிலைமொழியாவது வருமொழியாவது அல்லது அவ்விரண்டுமாவது விகாரப்பட்டுப் பொருந்துவது விகாரப் புணர்ச்சி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேன் | + | ஈ | = | தேனீ | — இயல்புப்புணர்ச்சி. |
| கல் | + | குடம் | = | கற்குடம் | விகாரப்புணர்ச்சி. |
| தண் | + | நீர் | = | தண்ணீர் | |
| வாழ் | + | நாள் | = | வாணுள் | |

### 31. விகாரப்புணர்ச்சி

தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

தோன்றல் விகாரத்தில் எழுத்தாவது சாரியையாவது தோன்றும். திரிதல் விகாரத்தில் நிலைமொழியின் ஈறுவது, வருமொழியின் முதலாவது அல்லது அவ்விரண்டுமாவது திரியும். கெடுதல் விகாரத்தில் நிலைமொழியின் ஈற்று எழுத்துக் கெடும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | வாழை | + | காய் | = | வாழைக்காய், | க் தோன்றியது. |
| | ஆல் | + | பழம் | = | ஆலம்பழம், | அம். சாரியை. |
| (2) | பொன் | + | கேணி | = | பொற்கேணி | நிலைமொழி திரிதல் |
| | நன் | + | நூல் | = | நன்னூல். | வருமொழி ,, |
| | வால் | + | நரன் | = | வானரன் | இரண்டும் ,, |
| (3) | மரம் | + | வேர் | = | மரவேர் | நிலைமொழியின் |
| | மரம் | + | உரி | = | மரவுரி | ஈறு கெடுதல் |

## 32. உயிரீற்றுப்புணர்ச்சி

நிலைமொழியின் ஈற்றில் உள்ள உயிர் எழுத்து வருமொழியோடு பொருந்துவது.

குறிப்பு:- உடம்படுமெய் நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் நிற்கும் உயிர்கள் பொருந்தும்படி தோன்றும் மெய்.

அ + ஆடு = அவ்வாடு வ் தோன்றினது
அவனை + அடி = அவனையடி ய் ....

### 32—1. வகர உடம்படுமெய் தோன்றுமிடம்

32—1. (அ) எகர வினாவின் பின்னும், சுட்டின் பின்னும் உயிரும், யகரமும் வரின் வகரந் தோன்றும்.

| | |
|---|---|
| எ+ஆடு=எவ்வாடு? | எ+யானை=எவ்யானை? |
| அ+ஆடு=அவ்வாடு | அ+யானை=அவ்யானை |
| இ+ஆடு=இவ்வாடு | இ+யானை=இவ்யானை |
| உ+ஆடு=உவ்வாடு | |

32—1. (ஆ) அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ, என்பன பின் உயிர்வரின் வகரந் தோன்றும்.

உயிர்மெய்யெழுத்தின் ஈற்றுஎழுத்து உயிரெழுத்து.

சில + உயிர் = சிலவுயிர். நொ + அழகு = நொவ்வழகு.

பலா + அடி = பலாவடி. போ + என = போவென.

திரு + அருள் = திருவருள். கௌ + அழகு = கௌவழகு.

பூ + ஒடு = பூவொடு.

32—2. (அ) இ, ஈ, ஐ-யின் பின் உயிர் வரின் யகரந் தோன்றும்.

புலி + ஊர் = புலியூர்.
தீ + ஆவி = தீயாவி.
பனை + ஓலை = பனையோலை.

32—2. (ஆ) ஏகார இடைச்சொல்லின் பின் உயிர்வரின் யகரந் தோன்றும்.

நீயே + அவன் = நீயே யவன்
நினைவே + இல்லை = நினைவே யில்லை.

## 33. வருமொழியின் மெய் மிகும் இடம்.

மிகும் என்னும் பதம் வருமொழியையும், இரட்டும் என்னும் பதம் நிலைமொழியையும் பற்றியன. உயிர்மெய்யின் முதல் எழுத்து மெய். கா = க் + ஆ

33—1. அ, இ, உ என்னும் சுட்டுக்களுக்குப் பின்னும், எகர வினாவின் பின்னும், யகரம்ஒழிந்த மற்ற மெய்கள் வரின் வந்த மெய்யே மிகும்.

அ + காடு = அக்காடு அ + ஞமலி = அஞ்ஞமலி

இ + சரீரம் = இச்சரீரம் அ + நாள் = அந்நாள்

| | |
|---|---|
| உ+தவளை=உத்தவளை | இ+மடம்=இம்மடம் |
| அ+பூனை=அப்பூனை | எ+மாது=எம்மாது |
| எ+கூடம்=எக்கூடம் | எ+வழி=எவ்வழி |
| எ+சரம்=எச்சரம் | எ+யாழ்=எவ்யாழ் |

33—2. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரிகளுக்குப்பின் க, ச, த, ப மெய்கள் மிகும்.

அறிவை+சேர்=அறிவைச்சேர் 2-ம் வேற்.

கந்தனுக்கு+கொடு=கந்தனுக்குக்கொடு 4-ம் வேற்.

33—3. அந்த, இந்த என்னும் சுட்டுத் திரிபுகளுக்குப் பின்னும், எந்த என்னும் வினைத்திரிபுக்குப் பின்னும் க, ச, த, ப மெய்கள் மிகும்.

| | |
|---|---|
| அந்த+குடம்=அந்தக்குடம் | எந்த+தேசம்=எந்தத்தேசம் |
| இந்த+சட்டி=இந்தச்சட்டி | அந்த+பானை=அந்தப்பானை |

33—4. வேற்றுமை வழியில்வரும் உயிரீற்று அஃறிணைப் பெயர்கள் பின் க, ச, த, ப, மெய்கள் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கோழி | + | குஞ்சு | = | கோழிக்குஞ்சு |
| பட்டு | + | சேலை | = | பட்டுச்சேலை |
| புலி | + | தோல் | = | புலித்தோல் |
| நாய் | + | படம் | = | நாய்ப்படம் |

33—5. வேற்றுமை வழியில் வரும் உயிரீற்று மரப் பெயர்களின் பின் க, ச, த, ப மெய்கள் மிகும், அல்லது இனவெழுத்துத் தோன்றும்.

| | |
|---|---|
| வாழை+குலை =வாழைக்குலை | விழாங்காய் |
| அலரி +சருகு =அலரிச்சருகு | பூஞ்செடி |
| சீத்தா +தோடு =சீத்தாத்தோடு | மாந்தோப்பு |
| பலா +பழம் =பலாப்பழம் | மாம்பழம் |

33—6. வேற்றுமை வழியிலும், அல்வழியிலும் தனி நெடிலான மொழியின் பின் க, ச, த, ப மெய்கள் மிகும்.

தீ+பெட்டி =தீப்பெட்டி வேற். வழி
தீ+பிடித்தது =தீப்பிடித்தது அல்வழி

### 34. மெய்யீற்றுப் புணர்ச்சி

நிலைமொழியீற்று மெய்யெழுத்து வருமொழி முதலில் நிற்கும் உயிர் எழுத்தோடும், உயிர்மெய் யெழுத்தோடும் பொருந்துவது.

கல்+ஆமை=கல்லாமை வருமொழிமுதல் உயிர்
கல்+சாடி =கற்சாடி ... .... மெய்

**34—1.** தனிக்குறில் அணைந்த மெய்யின் பின் உயிர் வரின் மெய் இரட்டும்.

புல்+அரிசி=புல்லரிசி மண்+ஆசை=மண்ணாசை
கொல்+உலை=கொல்லுலை பொன்+இலை=பொன்னிலை

**34—2** வேற்றுமை வழியில் தனிக்குறில் அணைந்த லகர, ளகர மெய்களின் பின் க, ச, த, ப மெய்வரின் அவை றகர, டகர மெய்களாய்த் திரியும்.

கல்+குடம் =கற்குடம் முள்+காடு =முட்காடு
கல்+சட்டி =கற்சட்டி முள்+செடி=முட்செடி
பல்+பொடி=பற்பொடி புள்+படைகள்=புட்படைகள்
பல்+தேய்வு=பற்றேய்வு கள்+பானை=கட்பானை

**34—3.** வேற்றுமை வழியிலும் அல்வழியிலும் தனிக்குறில் அணைந்த லகர, ளகரங்களின் பின் தகரம் வரின் இரண்டும் முறையே றகர, டகரங்களாய் இருமொழியிலும் திரியும்.

வேற்.கல்+தூண்=கற்றூண் | அல்.கல்+தீயது=கற்றீயது.
... முள்+தீமை=முட்டீமை | ... முள்+தெரித்தது=முட்டெரித்தது

34—4. வேற்றுமை வழியிலும் அல்வழியிலும் தனிக் குறில் அணைந்த ணகர, னகர மெய்களின் பின் நகரம் வரின் அந்நகரம் ணகர, னகரங்களாய்த் திரியும்.

| | |
|---|---|
| வேற். கண்+நீர்=கண்ணீர் | அல். தண்+நீர்=தண்ணீர் |
| ... பொன்+நிறம்=பொன்னிறம் | ... பொன்+நீளும்=பொன்னீளும் |

34—5. மகரவீற்று மெய்யின் பின் க, ச, த மெய் வரின் அம்மகரம் பெரும்பாலும் இனவெழுத்தாய்த் திரியும்.

கனகம் + கொடு = கனகங் கொடு
எல்லாம் + சேர்ந்தது = எல்லாஞ் சேர்ந்தது
மனம் + திரும்பு = மனந் திரும்பு

## அப்பியாசம் 14.

கீழ்க்கண்டவைகளைச் சேர்த்தெழுதி விதிகூறு

இடக்கர் + அடக்கல், அ + மாது, போ + என்றார், தீ + ஊது, பணத்தை + கொடு, நாய்க்கு + போடு, கண் + அழகு, பொன் + ஆபரணம், புள் + சிறகு, பனை + பழம், கோல் + உலை, பாம்பு + செவி.

## VIII. சொற்றொடரியல்

### பழைய பாடத்தில் கேள்விகள்

1. ஒரு வாக்கியத்தில் முக்கிய பாகங்கள் எவை?
2. பயனிலை நிற்கும்இடம் எது? எத்தனை வகையான பயனிலைகள் உண்டு.
3. எழுவாய்க்கும்,பயனிலைக்கும் உள்ள பொதுஇலக்கணம் என்ன?
4. செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றா வினைகளுக்கு ஆறு உதாரணம் கொடு.
5. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எவ்வண்ணம் கண்டுபிடிப்பாய்?

6. அடைமொழியாவது என்ன ?
7. உடன்பாடு, எதிர்மறை வாக்கியங்கள் கொடு

## அப்பியாசம் 15.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கண்டுபிடி

1. செல்வபுரி என்னும் நகரில் தனபதி என்னும் வைசியன் ஒருவன் இருந்தான்.
2. புகையிலைகள் நீண்டு வளரும்போது அவைகளுக்கு யாதொரு பழுதும் நேரிடாதபடி அவைகளைப் பாதுகாக்கவேண்டும்.
3. தேயிலையால் ஒருவகை நறுமணமும், சுவையுமுள்ள கஷாயம் செய்யலாம்.
4. விசிறிவாழையும் பாலைநிலத்தில் பயன் தருவதாகின்றது.
5. சிறுபிள்ளைகள் எப்பொழுதும் தாய்க்குச் சமீபத்திலேயே இருக்கவேண்டியவர்கள்.

## 35. வாக்கிய வகைகள்

வாக்கியங்கள் ஒன்றையொன்று தொடரும் விதத்தைக் கவனித்து அவைகள் (1) தனிநிலைவாக்கியம், தனிநிலைத் தொடர் வாக்கியம், (3) கலவை வாக்கியம் என வகுக்கப்படும்.

### 35—1. தனிநிலைவாக்கியம்

ஒரே எழுவாயும், ஒரேபயனிலையும் அடைமொழி முதலிய தொடர்மொழிகளோடு சேர்ந்து வருவது.

(உ-ம்) தினந்தோறும் நாம் சுத்தமான ஜலத்திலே ஸ்நானஞ் செய்யவேண்டும்.

இதில் எழுவாய்—நாம், பயனிலை—ஸ்நானஞ்செய்யவேண்டும். ஆகையால் ஒரே எழுவாயும் ஒரே பயனிலையும் மாத்திரம் உண்டு.

### 35—2. தனிநிலைத் தொடர்வாக்கியம்

இரண்டு முதலான தனிநிலைச் சமவாக்கியங்கள் ஒன்றையொன்று சார்ந்திராமல் தொடர்ந்து வருவது.

இவ்வகையில் பல எழுவாய்களுக்கு ஒரே பயனிலையாவது, அல்லது ஒரே எழுவாய்க்குப் பல பயனிலைகளாவது இருக்கும் இரண்டு முதலான தனிநிலை வாக்கியங்கள் ஒரு தனிமொழியால் இணைக்கப்பட்டிருக்கும்.

உதாரணம்

1. கோபாலும் கந்தனும் ரயில்வண்டி ஏறிவிட்டார்கள்.
2. இராமன் காலையில் ஸ்நானஞ்செய்து பாடங்களைப் படிப்பான்.
3. என் பெற்றோர் வண்டியில் உலாவப்போனார்கள், ஆனால் நானோ உதைபந்து விளையாடப்போனேன்.

குறிப்பு:- தனிநிலைத் தொடர்வாக்கியங்கள் சம அந்தஸ்து உள்ளன.

முதல்வாக்கியம் கோபால் ரயில்வண்டி ஏறினான், கந்தன் ரயில்வண்டி ஏறினான் என இரு தனிநிலை வாக்கியங்கள்.

இரண்டாவது வாக்கியம் இராமன் காலையில் ஸ்நானஞ் செய்வான், இராமன் பாடங்களைப் படிப்பான் என இருதனிநிலை வாக்கியங்கள்

குறிப்பு:- வினையெச்சங்களை வினை முற்றாக்கிக் கொள்க.

மூன்றாவது தனிநிலைத் தொடர் வாக்கியத்திலுள்ள இரு வாக்கியங்களையும் ஆனால் என்னும் தனிமொழி இணைக்கிறது.

### 35—3. கலவை வாக்கியம் (சங்கீர்ண வாக்கியம்)

முதல் நிலையாயுள்ள ஒரு தனிநிலை வாக்கியமும், அதை யாதாமொரு காரணம்பற்றிச் சார்ந்துவரும் துணைநிலை வாக்கியங்களும் சேர்ந்து வருவது.

முதல்நிலை வாக்கியம் தொடர்நிலை வாக்கியங்களில் முதல் இடத்தையுடைய பிரதம வாக்கியம். முதல்நிலை=முதனிலை

உதாரணம்

[1] இராமன் தன் வேலையைச் செய்ததினால் அவன் தகப்பனார் அவனைப் புகழ்ந்துகொண்டார்.

[2] அன்றாடகப் பாடங்களை ஆயத்தப்படுத்துகிற பிள்ளைகள் மிகவும் சந்தோஷமாயிருப்பார்கள்.

[3] தினந்தோறும் நாம் சிந்தனை செய்பவைகளை யார் கணக்கிடக்கூடும்.?

குறிப்பு:- தடித்த எழுத்திலுள்ளவை முதனிலை வாக்கியங்கள். மற்றவை அவைகளைச் சார்ந்து நிற்கும் துணைநிலை வாக்கியங்கள்.

முற்றிற்று.

---

## றகர, ரகர பேதம்

| | |
|---|---|
| அறவு...அறுபட்ட இடம் | இறங்கல்...கீழே வருதல் |
| அரவு...பாம்பு | இரங்கல்...பரிதபித்தல் |
| அறிவை...அறிந்துகொள்வாய் | இறு...ஒடி |
| அரிவை...பெண் | இரு...உட்காரு |
| அறிவாள்...அறிந்துகொள்வாள் | இறுப்பு...ஒடித்தல் |
| அரிவாள்...ஒரு ஆயுதம் | இருப்பு...இருக்கும் இடம் |
| அறும்பு...கொடுமை | இறும்பு...வண்டு |
| அரும்பு...மொட்டு, அரிசி | இரும்பு...உரமான லோகம் |
| ஆறல்...ஆறுதல் | இறைப்பு...சொரிதல், இறைக்கும் |
| ஆரல்...ஒரு புடு | இரைப்பு...இரைத்தல் [தன்மை |
| ஆறி...காயம் நீங்கி | இறப்பு...மரணம் |
| ஆரி...பார்ப்பனி, மாலை | இரப்பு...யாசித்தல் |

ஈறல்...துக்கம்
ஈரல்...பித்தின் தானம்
உறவர்...சுற்றத்தோர்
உரவர்...அறிவுடையோர்
உறக்கம்...நித்திரை
உரக்கம்...வசத்தில் இருத்தல்
உறுபு...செறிவு, மிகுதி
உருபு...குறி
உறவல்...துன்பம்
உருவல்...மறைந்துபோய்விடுதல்
உறுப்பு...அங்கம்
உருப்பு...பூரணம்
ஊறல்...ஊறுதல்
ஊரல்...காய்ந்துவரும் புண்
எறியீட்டி...வீசுகிற ஈட்டி
எரிவண்டு...காந்தும் வண்டு
எறல்...எறுதல்
எரல்...கிளிஞ்சில் உள்ள ஊர்
எறுளர்...படைவீரர்
எராளர்...சமுசாரி
ஒறுத்தல்...குறைத்தல், தண்டித்தல்]
ஒருத்தல்...ஆண் விலங்கு
கறவை...பாற்பசு
கரவை...கருவிகளில் ஒன்று
கற...பால் கற
கர...ஒளி
கறித்தல்...கடித்தல், புசித்தல்
கரித்தல்...எரித்தல்
கறையான் ... சிதல் என்னும் பிராணி]
கரையான்...மனமுருகான்
குறங்கு...தொடை
குரங்கு...வானரம்
குறவர்...குறிஞ்சி மக்கள்
குரவர்...பெரியோர்
கூறிய...சொன்ன
கூரிய...கூர்மையான
கூறை...மணவாட்டியின் புதுப் புடவை, பங்கை]
கூரை...வீட்டின் மேற்புறம்
சிறங்கை...கைநிறைந்த அளவு
சிரங்கை...சிரங்கின் 2-ம் வேற்.
சிறு...சின்ன
சிரு...தோட்பொருத்து
சூறை...கொள்ளை, சுழல்காற்று
சூரை...ஒரு செடி
செறு...வயல்
செரு...சண்டை
செறுப்பு...கொலை
செருப்பு...மிதியடி
சொறிவு...தினவு
சொரிவு...உதிர்வு, பொழிவு
த்றித்தல்...வெட்டல்
தரித்தல்...அணிதல்
தறை...ஆணியின்சடை
தரை...பூமி
தாறு...இருப்புமுள், அளவு
தாரு...மரக்கொம்பு, பித்தளை
துறவு... இல்லறம்நீக்கி நிற்றல்
துரவு...கிணறு

பீறு—கிழிவு
பீரு—புருவம், புலி
பேறு—பெறுதல், வரம்
பேரு—சமுத்திரம், பொன்மலை
மறிப்பு—தடுப்பு
மரிப்பு—சாதல்
மறுப்பு—மறுக்குதல்
மருப்பு—மரக்கொம்பு, இஞ்சி
மறை—வேதம், ஒளிப்பிடம்
மரை—தாமரை, ஒரு மிருகம்
வறவு—கஞ்சி
வரவு—வருகை
விறல்—பெருமை, வெற்றி
விரல்—அங்குலி
வேறல்—வெல்லுதல்
வேரல்—மூங்கில்

---

## எதிர்மொழிகள்

அண்மை × சேய்மை
அரூபி × சொரூபி
அற்பம் × மேன்மை
அந்தரங்கம் × பகிரங்கம்
அநுகூலம் × பிரதிகூலம்
அவசியம் × அனவசியம்
அதிஷ்டம் × துர்அதிஷ்டம்
அநுக்கிரகம் × நிக்கிரகம்
ஆதி × அந்தம்
ஆஸ்திகர் × நாஸ்திகர்
ஆசாரம் × அனாசாரம்
இன்பம் × துன்பம்
இம்மை × மறுமை
இல்லறம் × துறவறம்
இதம் × அதம், அகிதம்
இலக்ஷணம் × அவலக்ஷணம்
உதயம் × அஸ்தமனம்
உயர்வு × தாழ்வு
உத்தமம் × அதமம்
உபகாரம் × அபகாரம்
உபசாரம் × அபசாரம்
உசிதம் × அநுசிதம்
ஏகம் × அநேகம்
ஐசுவரியம் × தரித்திரம்
ஜனனம் × மரணம்
ஜாக்கிரதை × அஜாக்கிரதை
ஜெயம் × அபஜெயம்
கண்டம் × அகண்டம்
களங்கம் × நிஷ்களங்கம்
கிரமம் × அக்கிரமம்
கீர்த்தி × அவகீர்த்தி
குறைவு × நிறைவு
ஞானம் × அஞ்ஞானம்
சத்துரு × மித்துரு
சட்டை × அசட்டை
சரீரி × அசரீரி

சர்க்குணன் X துர்க்குணன்
சத்தியம் X அசத்தியம்
சாத்தியம் X அசாத்தியம்
சுபுத்தி X துஷ்டபுத்தி
சுத்தம் X அசுத்தம்
சுதேசி X பரதேசி, விதேசி
சுக்கிலபக்ஷம் X கிருஷ்ணபக்ஷம்
செங்கோல் X கொடுங்கோல்
சேதன X அசேதன
தீவிரம் X மந்தம், தாமதம்
தூரம் X சமீபம்
நன்மை X தீமை
நாதி X அநாதி
நியாயம் X அநியாயம்
நித்தியம் X அநித்தியம்
நீளம் X அகலம்
நீதி X அநீதி
நூதனம் X புராதனம்
பக்தி X அவபக்தி
பலம் X அபலம்
பற்பல X சிற்சில
பாக்கியம் X நிர்பாக்கியம்
புகழ்ச்சி X இகழ்ச்சி
புதுமை X பழமை
பூமண்டலம் X பரமண்டலம்
பிரயோஜனம் X அப்பிரயோஜனம்
பெருமை X சிறுமை
பேரின்பம் X சிற்றின்பம்
மங்கலம் X அமங்கலம்
மதிப்பு X அவமதிப்பு
மலம் X நிர்மலம்
மானம் X அவமானம்
மானுஷ்யம் X நிர்மானுஷ்யம்
மெய் X பொய்
யோக்கியம் X அயோக்கியம்
நாகரீகம் X நிர்நாகரீகம்

## பரீக்ஷை வினாக்கள்

1. இனவெழுத்து என்றால் என்ன? எவை எவற்றிற்கு இன வெழுத்தாகும்?
2. திசைச்சொல், இலக்கணப்போலி, இடக்கர் அடக்கல், குழூஉக்குறி இலட்சணி.
3. பெயர்ச்சொற்களின் வகைகளை எடுத்துக்காட்டி இரு உதாரணம் கொடுத்து விளக்கு.
4. வினையாலணையும் பெயர், ஆகுபெயர், துணைக்கருவி, பிறிதின் கிழமை, விளிக்கப்படாத பெயர்கள் என்றால் என்ன?
5. வேற்றுமையும் பொருளும் கூறு:-
(1) ஆசை உள்ளான், (2) பித்தளைப்பூட்டு, (3) இராமர் மனைவி, (4) மூளையிற் சிறந்தவர், (5) செல்வினது அம்பாரம், (6) காலில் வீக்கம், (7) கந்தன் கடை.
6. தெரிநிலை வினைகளின் முக்கிய வகைகள் எவை? இரு உதாரணம் கொடு. அவை காலம் உணர்த்தும் விதம் என்ன?
7. எதிர்மறை வினைமுற்று உண்டாகும் விதம் என்ன?
எதிர்மறையாக்கு:- போனான், வருகிறாள், நடப்பார்.
8. முக்காலத்தையும் உணர்த்தும் வினையெச்ச விகுதிகள் எவை? நட, கல், படு என்ற வினையடியாய்ப் பிறக்கும் தெரிநிலைப் பெயரெச்சம், வினையெச்சங்களை உண்டாக்கு.
9. குறிப்புப் பெயரெச்சம், வினையெச்சங்கள் எவற்றினடியாய்ப் பிறக்கும்? அவைகளின் வித்தியாசம் என்ன?
10. வேற்றுமைத் தொகை, அல்வழிப்புணர்ச்சி, உம்மைத் தொகை, தொகைநிலைத்தொடர் என்றால் என்ன? உதாரணங்கள் கொடுத்து விளக்கு.
11. பின்வரும் தொடர்மொழிகளைப் பிரித்து எழுதி நியாயங்கூறு.
தீப்பெட்டி, அங்ககரம், தலையைத்தேய்.

அருணோதயம் பிரஸ், வண்ணார்பேட்டை. 1932

# திருத்தமும் குறிப்பும்—III

1...1. திருத்தம்-தமிழ்எழுத்துக்கள் உயிர்க்கணம்

1...2 பி. பிழை-அம்மனுஷன், திருத் — அம்மனிதன்.

9...2. காரண இடுகுறிப்பெயர்—உதாரண விளக்கம்.

வற்றல், செவிடன், பறவை, நாற்காலி.

காரணம் கருதும்போது, வற்றல், வற்றின பொருட்கள் யாவற்றிற்கும்; செவிடன் கேள்விப்புலனற்ற மனிதருக்கும்;பறவை பறந்து செல்லக்கூடிய பட்சி முதலிய பொருள்களுக்கும்; நாற்காலி நான்கு கால்கள்உள்ள சாமான்களுக்குப்பெயராய் வழங்கக்கூடியதானாலும்.

காரணம் கருதாதபோது மிளகுவற்றலுக்கும், செவிடன் என வழக்கமாய் விளிக்கப்படும் ஒருவனுக்கும், இயற்கையாய் ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளுக்கும் நான்குகால்கள் உள்ள ஆசனத்திற்கும் பெயராகி காரண இடுகுறிப்பெயராகின்றன.

9...3. பிழை,—மனுஷன், திருத்தம்,—மனிதன்.

10...இ. வினையாலணையும்பெயர்--வினைமுற்றே பெயராய்வழங்குவது

11...1. திணை என்பதுகுலம் அதாவது ஒரே இனவகையைச்சேர்ந்த தொகுதி.

11...2. பிழை-ஆயன்-ஆச்சி, திருத்-ஆய்ச்சி.

12. வேற்றுமை-அதாவது பெயரின் இயல்பு ஈற்றில் மாறுதல் அடைந்து பல பொருள்களை [கருத்துக்களை] உணர்த்துவது.

12...3. ஆன்-உருபு-[உ-ம்] காலான்முடவன்.

14. சாரியை-பெயர்வினைகளை அடுத்து அவைகளைச் சார்ந்துவரும் இடைச்சொல்.

15...8. பிழை-கண்டுண்டிலேன்; திருத்-சட்டுண்டிலேன்.

17...2. அ. வந்த-த்இரட்டித்தது சந்தி.திருத்-த்மெலித்தது விகாரம்.

17...3. எழுத்துப்பேறு-எழுத்தைப் பெறுதல்.

29...1. இ. உவமைத்தொகை, பிழை குருட்டுக்கண்; திருத்தம்-பூம்பருப்பு, பூங்கொடி, பூப்போல் அவிந்தபருப்பு.

# பால போத கணித புத்தகம்

Mr. **A. J.** எட்வர்ட், சுவாமிக்கண் இயற்றியது.

| | | |
|---|---|---|
| 1. | முதலாம் புத்தகம்—முதல் வகுப்புக்கு | 0 3 0 |
| 2. | இரண்டாம் புத்தகம்—இரண்டாம் வகுப்புக்கு | 0 3 0 |
| 3. | மூன்றாம் புத்தகம்—மூன்றாம் வகுப்புக்கு | 0 4 0 |
| 4. | நான்காம் புத்தகம்—நான்காம் வகுப்புக்கு | 0 6 |
| 5. | ஐந்தாம் புத்தகம்—ஐந்தாம் வகுப்புக்கு | 0 8 |

*These can be got in Tamil and Telugu.*

கிடைக்கும் இடம்.

(1) The Secretary,
Christian Literature Society,
Park Town, Madras.

(2) The C. M. S. Bible & Book Depot,
Murugankurichy,—Palamcottah.
Tinnevelly Dt.

# பால போத இலக்கணம்

Mr. **A. J.** எட்வர்ட், சுவாமிக்கண் இயற்றியது.

| | | |
|---|---|---|
| 1. | முதலாம் புத்தகம்—நான்காம் வகுப்புக்கு | 0 |
| 2. | இரண்டாம் புத்தகம்—ஐந்தாம் வகுப்புக்கு | 0 |
| 3. | மூன்றாம் புத்தகம்—முதலாம் பாரத்திற்கு | 0 |
| 4. | நான்காம் புத்தகம்—இரண்டாம் பாரத்திற்கு | 0 |
| 5. | ஐந்தாம் புத்தகம்—மூன்றாம் பாரத்திற்கு | 0 |

கிடைக்கும் இடம்.

(1) Mr. A. J. Edward Swamickan,
Teacher,
Murugankurichy,—Palamcottah.

(2) The C. M. S. Bible & Book Depot,
Murugankurichy,—Palamcottah.
Tinnevelly Dt.